223464

# கிராமாநுகூலன்

1924 ஜூன் - ஜூலை

JL
1/31m N27GR
N24[illegible]6
223464

Regd. No. M. 1930

வந்தேமாதரம்

223464

14 OCT 1924

# கிராமானுகூலன்

# GRAMANUKOOLAN.

(ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.)

புத்தகம் 1. | 1924-ளு ஜூன்-ஜூலை மீ ரக்தாக்ஷி ளு ஆனி மீ | ஸஞ்சிகை 6.

**சந்தா விபரம்.**

உள்நாட்டுக்கு வருட சந்தா (தபாற்கூலி உள்பட) ... ரூ. 2-0-0.
வெளிநாடுகளுக்கு " ... ரூ. 2-8-0.
தனிப்பிரதி " ... ரூ. 0-3-0.

விஷயசூசிகை.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | சர்வதேசக் கூட்டுறவாளர் மகாநாடு—(பத்திராதிபர்) | 125 |
| 2. | தஞ்சைஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடு | 126 |
| 3. | மாயவரம் தாசில்தார். | 127 |
| 4. | மன்னார்குடி தாசில்தார் | 128 |
| 5. | இணைத்த கிராமங்களை பிரித்தல் | 128 |
| 6. | லோகல் பண்டு ரோட்டு | 128 |
| 7. | இந்திய கிராமங்களும் இந்திய நாகரிகமும் (ஸ்ரீமான். கே. எஸ் ராமஸ்வாமி சாஸ்திரிகள் B. A. B. L. சப்ஜட்ஜ் நாகப்பட்டணம்) ... | 129 |
| 8. | கிராமங்களில் கூட்டுறவு ஜலப்பாய்ச்சல் சங்கம் (ஸ்ரீமான் நாராயணசாமி ஐயர், மெலட்டூர்) ... | 133 |
| 9. | பாங்குகளின் முறையும் அவைகளின் உபயோகமும்— (ஒரு பாங்க் காஷியர்) ... | 135 |
| 10. | கூட்டுறவாளர்க்கேற்ற சிலதுறை— (ஸ்ரீமான் வை. சா. வேங்கடராம ஐயர்) ... | 137 |
| 11. | ஜீவகாருண்யம் (ஸ்ரீமான் N. R. சுப்பிரமணிய ஐயர்) | 141 |
| 12. | ராணா பிரதாப சிம்மன் அல்லது ரஜபுத்திர தேசபக்தி— (ஸ்ரீமான் எஸ். மகாலிங்க சர்மா.) ... | 143 |
| 13. | விளம்பரங்கள் | 145-148 |

**விளம்பர விகிதம்.**

பக்கம் 1-க்கு (2 காலம்) மீ 1-க்கு ரூ. 10 } காலம் ½-க்கு மீ 1-க்கு ரூ. 2-8-0
பக்கம் ½-க்கு (1 காலம்) " 1-க்கு " 5. } இஞ்ச் 1-க்கு " அணா 8.
நீடித்த விளம்பரங்களுக்கு மானேஜருக்கெழுதித் தெரிந்துகொள்ளவும்.

N. ஆபத்ஸகாய ஐயர்—பத்திராதிபர்.

கிராமானுகூலன் ஆபீஸ்,—கும்பகோணம்.

# கிராமானுகூலன்.

## சந்தா விவரம்.

| | |
|---|---|
| போஷகர்களுக்கு வருஷம் 1-க்கு ரூ. | 50—0—0. |
| அபிமானிகளுக்கு ,, ... | 15—0—0. |
| ஜீவிய சந்தா ... | 25—0—0. |
| வருட சந்தா(இந்தியா, பர்மா, சிலோன்.) ... | 2—0—0. |
| அயல்நாடுகளுக்கு(சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் நேட்டால்) .... | 2—8—0. |

[பத்]திரிகாபிமானிகள் போஷகர்களாகவும் அபிமானிகளாகவும் ஜீவிய சந்தாதார்களாகவும் சேர்ந்து ஆதரிக்கவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்


## மனையடி சாஸ்திரம்

சௌக்கியமாகவும் சம்பத்துடனும் வாழ விரும்புவோர் வீடு, குளம், கிணறு, தோட்டம் முதலியவைகளை சாஸ்திரப்படி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கிரந்தம், தெலுங்கு, தமிழ் முதலிய பாஷைகளில் உள்ளவைகளை தமிழில் எளியவசன நடையில் புலிவலம் ஆர். கோபால அய்யரால் எழுதப்பட்டது மேற்படி 1-ம்பாகம் விலை ரூபா 1. மேற்படி 2-ம பாகம் அணா 9. குளம் கிணறு வெட்ட ஜலாசய நிர்மாண சாஸ்திரம் அணா 8 கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதவும்.

ஆர், கோபாலய்யர்,
புலிவலம்
விஜயபுரம் போஸ்டு, தஞ்சாவூர் ஜில்லா.

## முக்கிய புஸ்தகங்கள்,

தமிழ்.

| | | |
|---|---|---|
| புராதன இந்தியா' (56 தேச விருத்தாந்தம்.) | 1 | 8 |
| விரதங்கள்' (இரண்டு பாகம்) | 1 | 0 |
| இராஜராஜ சோழன் சரித்திரம் | 0 | 8 |
| பாக சாஸ்திரம் | 0 | 8 |

வைத்தினாதன் பிரதர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை.

## சிற்றின்ப சாஸ்திரம்.

பிரசித்தி பெற்ற அருமையான இந்நூலில் ஸ்[திரீ] புருஷர், இவ்வுலகில் அனுபவிக்க வேண்டிய சிற்ற[ின்ப] ரகசியங்கள், ஸ்திரீகளின் பருவப்பெயர்கள், புருஷ[ர்க]ளின் பருவப் பெயர்களும், மானிட இன்பங்களில் 5[?] இதில் ததும்பிக் கிடக்கின்றன.

புத்தகம் 1-க்கு வி. பி. சார்ஜ் உள்பட விலை ரூ 1

[எ]ம். லீலா அண்டு கம்பெனி,
சௌகார்பேட்டை மதராஸ்.

## [ந]வரச மஞ்சரி

ஓர் உயர்ந்த மாதாந்தர தமிழ்ப் பத்திரிகை.

இதில் தெய்வபக்தி, ஞானம், கல்வி, சாஸ்திரம், பொது விஷயங்களுடன் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆழ்வார் இயற்றிய மகாபாரதத்திற்கு மூலமும் உரையுமாக அனுபவம்பெற்ற வித்துவான்களால் எழுதப்பட்டு வருகிறது ஹிதோபாதேசம், பொது வர்த்தமானங்கள் முதலியனவும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வருஷ சந்தா ரூ 5-8-0 6 மாதத்திற்கு ரூ -3. மாதிரி காப்பி வேண்டுவோர் 8 அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

'நவரச மஞ்சரி" ஆபீஸ்
511, தங்கசாலை வீதி, பார்க்டவுன் சென்னை.


வந்தேமாதரம்.

# கிராமானுகூலன்.

[ ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.]


223464
14 OCT. 1924


"ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே.
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின்நமக்கேதுவேண்டும்"—பாரதி.

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."—ஔவை.


| புத்தகம் 1 | ரக்தாக்ஷி-வருஷ ஆனி-மீ | ஸஞ்சிகை 6 |
|---|---|---|


## சர்வதேசக் கூட்டுறவாளர் தினம்.

ஜூலை மீ 5உ யைச் சர்வதேசக் கூட்டுறவாளர் தினமாகக் கொண்டாடப்பட்டது. உலகத்திலுள்ள எல்லா தேசத்தார்களாலும் கொண்டாடப்படும் தினம் இதுவொன்றுதான் என்று சொல்லவேண்டியதில்லை. அப்படி சர்வதேசத்தாராலும் கொண்டாடப்படும் தினம் மகா உத்கிருஷ்டமான தினமன்றோ? இதில் இந்தியாவும் இவ்வருஷம் பங்கெடுத்துக் கொண்டது விசேஷமே!

கூட்டுறவு இயக்கமானது தேசமுன்னேற்றத்திற்கு மிகவும் இன்றியமையாதது. அதன் கொள்கைப்படி காரியங்கள் நடைபெற்றால் தேசத்தில் வறுமை யென்பது தலைகாட்ட முடியாது. ஏழை—பணக்காரர் என்ற வித்தியாசம் அற்றுப் போகும்; ஜாதிமதபேதங்களாலுண்டாகும் சண்டைகள் நிகழா; கைத்தொழில்கள் விருத்தியாகும்; ஒற்றுமை ஏற்படும் இன்னும் எவ்வளவோ நன்மைகளை அடையலாம். ஆனால், இந்தியாவில்-அதிலும் சென்னை ராஜதானியில்-அதன் கொள்கைப்படி அநேகமாய் நடைபெறவில்லை யென்று தெரிவிக்க வருந்துகிறோம் அதினால் கூட்டுறவு இயக்கமானது இந்த ராஜதானியில் உண்மையான தத்துவங்களுடன் நடைபெறவில்லை யென்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. முதன்முதல் ரெஜிஸ்டிராராய் ஏற்பட்ட ஸர். பி. ராஜகோபாலாச்சாரியார் காலத்திலும், இரண்டாவது ரெஜிஸ்டிராராக ஏற்பட்ட திவான்பகதூர் ஆர். ராமச்சந்திரராவ காலத்திலும் சரியான கொள்கைகளுடன் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. கிராமங்களில் ஐக்கிய பாவத்துடன் சங்கங்கள் விருத்தியடைந்து வந்தன. பொதுஜன நன்மையைநாடினவர்களும் இதில்கலந்துகொண்டனர். சர்க்கார் உத்தியோகத்திலிருப்பவர்களில் தேசாபிமானம் உள்ளவர்களும் இந்த இயக்கத்தில் சம்மந்தப்பட்டு உழைக்கலானார்கள். இயக்கமோ வெகுதீவிரமாகப்பரவ ஆரம்பித்தது. அந்த வேகத்தைக் கண்டு வெகு சீக்கிரத்தில் இந்தியாவுக்கு இந்த இயக்கம் சுயராஜ்ஜியம் சம்பாதித்து விடக்கூடுமென்று எண்ணமுண்டாகியது அதிகாரி வர்க்கத்தினருக்கு சந்தேகம்ஜனித்தது. உடனே திவான்பகதூர் ஆர் ராமசந்திரராவ் கலெக்டராக மாற்றப்பட்டார். திவான்பகதூர் எல். டி. சாமிக்கண்ணுபிள்ளை ரெஜிஸ்டிராராக நியமிக்கப்பட்டார். அவருக்குப் பிறகு ஐ-சி-எஸ். வகுப்பாரையே ரெஜிஸ்டிராராக நியமித்து விட்டார்கள். இயக்கமும் அதிகாரி வர்க்கத்தினர் ஆணைப்படி நடைபெற ஆரம்பித்து விட்டது. பொதுஜன ஊக்கம்

தளர்ந்து விட்டது. ராஜீய வர்திகளைக் கான்பரன்ஸுகளுக்கு அக்கிராஸனராகத் தெரிந்தெடுக்கக் கூடியதுமுண்டாகி விட்டது. ரெஜிஸ்டிரார்குறிப்பிடுகிறவர்களை தெரிந்தெடுக்க வேண்டியதாகிவிட்டது: மந்திரிகளிடம் இந்த இலாக்கா விடப்பட்டதினுல் தங்களுக்கு ஓட்டுகள் சேகரித்தவர்களைக் கௌரவப்படுத்த எண்ணி கூட்டுறவு என்ற வார்த்தையைக்கூட கேட்டிராதவர்கள் கௌரவ உதவி ரெஜிஸ்டிரார்களாக நியமிக்கப்பட்டார்கள். கோவாபரேட்டிவ் சூபர்வைஸிங் யூனியன் என்று ஏற்படுத்தி அதற்கு அதிகார மொன்று மில்லாமல் தபாலாபீஸ் போல் நடந்து வருகிறது. யூனியன் கவர்னிங்பாடி மெம்பர் எலக்ஷன் ஜில்லா பாங்கு டைரக்டர் எலக்ஷன் முதலியவைகளிலும் அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார்களும் இன்ஸ்பெக்டர்களும் ஓட்டுகள் சேகரிக்கவும் கக்ஷிப்பிரதிகக்ஷி கட்டவும் ஆரம்பித்து விட்டார்கள்.

அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார்களோ முந்தி டிப்டிகலெக்டர் கிரேடிலிருந்து எடுக்கப்பட்டு வந்தார்கள். இப்பொழுது டிப்டிதாசில்தார் கிரேடுக்கு வந்து விட்டது கௌரவ அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார்களை தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் மாதிரி அஸிஸ்டெண்டு ரெஜிஸ்டிரார்கள் கருதுகிறார்கள். இன்னம எவ்வளவோ சிதம்பர ரகசியங்கள் நடக்கின்றன. இவ்வித நிலைமையில் ஐக்கிய இயக்கமானது உண்மையான தத்துவங்களுடன் நடைபெற முடியாமலிருப்பது ஆச்சரியமல்ல. இந்தஇயக்கம் உண்மையான கொள்கையுடனும் தேசம் முன்னேற்ற மடைய வேண்டுமென்ற எண்ணத்துடனும் நடைபெற வேண்டுமானுல் இந்தியா சுயராஜ்ஜியம்பெற்றுல்தான்முடியுமென்பது திண்ணம். ஜூலை மீ 5உயை எல்லாதேசத்தாருடன் சேர்ந்து கொண்டாட வேண்டுமென்று ஆரம்பித்திருப்பதிலிருந்தாவது மற்ற தேசங்களைப்போல் நாமும் நல்ல ஸ்திதியை அடையவேண்டுமென்ற ஆசை கிராமவாசிகளுக்கு உண்டாகி சங்கங்களை சரியான கொள்கையுடன் நடத்திவா வேணுமாய்க் கோருகிறோம்.

———0———

## தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடு.

நாளது அக்டோபர் மீ 12உ மாயவரத்தில் தஞ்சைஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் மகாநாடு கூட ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. சட்டசபை மெம்பரும் கடலூர் வாசியும் பொதுஜன அபிமானம் நிறைந்தவரும் கிராம உத்தியோகஸ்தர்களிடத்தில் மிகுந்த அனுதாப முடையவருமான ஸ்ரீமான் ஆர். ஸ்ரீனிவாச அய்யங்கார் அக்கிராசனம் வகிக்க அன்புடன் ஒப்புக் கொண்டிருப்பதாகத்தெரியவருகிறது. சட்டசபை மெம்பர்களில் சிலர் மகாநாட்டுக்கு விஜயம் செய்வதாக காரியதரிசிக்குத்தெரிவித்திருப்பதாகவும் தெரிகிறது. கிராம உத்தியோகஸ்தர்கள் சிறிது ஊக்கம் காட்டிவிட்டு அயர்ந்து நித்திரை போய் விட்டதன் பயனுக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளும் இடையூறுகளும அதிகரித்து விட்டன. இனியாவது உறக்கத்திலிருந்தெழுந்து ஊக்கத்துடன் நடந்துகொள்ள வேண்டியது அவசியம் என்று வற்புறுத்துகிறோம். தங்கள் சம்பளம் உயர்வதற்கு மாத்திரந்தான் சங்கம் தேவை என்றும், பிறகு சங்கம் எதற்காக என்றும் சில கிராம உத்தியோகஸ்தர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். சங்கம் எப்பொழுது மிருக்க வேண்டுமென்பதையும் அதை சரிவர நடத்திவர வேண்டுமென்பதையும் அதனுல் பலவித நன்மைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கு மென்பதையும் நாம் சொல்லத் தேவையில்லை. சங்கங்கள் சரிவர நடந்து கொண்டிருந்தபோது ஏற்பட்டிருந்த மரியாதையையும் இப்போது ஏற்பட்டுவரும் மரியாதையையும் ஒவ்வொரு கிராம உத்தியோகஸ்தரும் தம்மனதைத்தொட்டுப்பார்த்துத்தெரிந்து கொள்ளட்டும். "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு" என்பது பொய்யாகுமா? மகாநாடுகள் தங்கள் குறைகளைக் கவனிக்கமட்டும் கூடுவதாக நினைக்க வேண்டாம். மகாநாடுகளுக்குச் சென்று அதில் கலந்து கொள்வதினுல் நல்ல குணங்கள் விருத்தியாகி ஒற்றுமையாயிருக்க வேண்டியதின் அவசியம் புலப்படும். சுமார் 3000 கிராம உத்தியோகஸ்தர்கள் உள்ள இந்த ஜில்லாவில் குறைந்தபக்ஷம் 1000 பேர்களாவது மகாநாட்டிற்கு விஜயம்செய்யவேணும். அப்பொழுதான் அவர்களுக்கு உண்மையாகக்குறைகளிருக்கிற தென்பதையும் அதை பரிகரிக்க வேண்டியதவசிய மென்பதையும் கெவர்ன்மெண்டாரும் சட்டசபை மெம்பர்களும் அனுதாபமுடையவர்களும் உணரக்கூடும். ஒவ்வொருகிராம உத்தியோகஸ்தரும் மகாநாட்டுக்குச் செல்லவேண்டியது தனது கடமையென்று எண்ணி எந்த வேலைத் தொந்திரவிருந்த போதிலும் தவாது விஜயம் செய்து மகாநாட்டை இனிது நடைபெறச் செய்து நன்மையடைவார்களென்று நம்புகிறோம்.



தஞ்சை 'ஸமரஸபோதினி'யில் வெளியாயிருக்கும் அடியிற்கண்ட விஷயத்தையும் கிராம உத்தியோகஸ்தர்கள் கவனிக்க விரும்புகிறோம்.

(கிராம உத்தியோகஸ்தர்கள்.)

"இம்மாதக் கடைசிவாரத்தில் தஞ்சைஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் எதற்காக மாயவரத்தில் மகாநாடு கூடுகிறார்களென்பது தமக்குத் தெரியவில்லை யென்றும், அவர்களுக்கு இன்னும் என்ன குறைகளிருக்கின்றன வென்றும், அவைகளைப் பொது ஜனங்களுக்கு அறிவித்தால் உபயோகமாயிருக்கு மென்றும் ஒரு மான்ய நிருபர் மன்னார்குடியிலிருந்து நமக்கு எழுதிய நீண்டதொரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வரும் சம்பளம் அதிகமென்றும் வேலைக் குறைவென்றும், ஆகவே அவர்களுக்குக் கவர்ன்மெண்டார் இணங்கக்கூடாதென்றும் அக்கடிதத்தில் பொறித்துள்ளார். அந்நிருபர் எழுதியுள்ள மற்றவைகளைக் குறிப்பிட எமக்கு விருப்பமில்லை. ஒரு விஷயம் மேற்படி நிருபருக்குத் தெரிவிக்க விரும்புகின்றோம். உண்மையாகக் கிராம உத்தியோகஸ்தர்களின் குறைகளை அறிய விரும்பினுல், அந்நிருபர் மாயவரம் மகாநாட்டுக்கு விஜயம் செய்து அவர்கள் குறைகளை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்."

———

### மாயவரம் தாசில்தார் ஸ்ரீமான் T. ராதாகிருஷ்ணய்யர்

———

ஸ்ரீமான் T. ராதாகிருஷ்ணய்யர், ரெவின்யூ போர்டாரின் உத்தரவுப்படி மறு உத்தரவு வரை சஸ்பெண்டு செய்யப்பட்டிருப்பதாய்த்தெரிகிறது சர்க்கார் சம்பளம் பெறும் வெட்டிகளைச் சொந்த வேலை வாங்கிவந்தது குற்றமென்றும் சொல்லப்படுகிறது. இது விஷயத்திற்கு உதவியாயிருந்ததாக சில தாலுக்கா குமாஸ்தாக்களும் சஸ்பெண்டு செய்யப்பட்டிருக்கிறார்களாம்.

இவர்கள் என் செய்வார்கள்? பாவம்! மேலதிகாரிகளின் அபிப்பிராயப்படி நடந்து வந்தவர்களாகத்தான் இருக்கவேண்டும். நிர்வாக யந்திரம் சுழன்று கொண்டிருக்கும் மாதிரியில் குமாஸ்தாக்கள் உண்மையை மதித்து மேலதிகாரிகளின் குற்றங்களைக் கண்டிக்க யோக்யதை உண்டா? ஏழைகளாகிய குமாஸ்தாக்கள் மன்னிக்கப் பெறுவார்களென்று நம்புகிறோம். இது வெகுநாளாக நடந்து வந்ததென்றும் வழக்கமாய்ப்போய்விட்டதென்றும் சொல்லப் படுகிறதாம். வெகுநாளாய் திருடினவன் அகப்பட்டுக் கொண்டால் வழக்கமாய்த்திருடிவருவதால் திருட்டல்ல வென்று ஏற்படுமா? கணக்குகளிலும் சம்பள பில்களிலும்கூட பிசகுகள் செய்யப்பட்டிருப்பதாய்க் கேள்விப்படுகிறோம். உண்மையாயிருக்குமானுல மிகவும் வருந்தத்தக்கதே. எந்த வட்டத்தில் அசாமி நியமிக்கப் பட்டிருக்கிறதோ அந்தவட்டம் கிராமஉத்தியோகஸ்தர்களுக்குக்கூட யாதொரு தகவலும் தெரியாதாம். என்ன விந்தை! ஸ்ரீமான் டி. ராதா

கிருஷ்ணய்யர், தான் பாபநாசம் தாலுகா கிராம உத்தியோகஸ்தர்கள் வேலைநிறுத்தம் செய்திருந்த காலத்தில் தாசில்தாராயிருந்து கிராம உத்தியோகஸ்தர்களைப் படாத பாடுபடுத்தி அநேகரை சஸ்பெண்டு செய்த புண்ணியவான் பிரசிடெண்டையும் செக்ரிடெரி ஸ்ரீமான் P.S. ராமச்சந்திரய்யரையும் டிஸ்மிஸ் செய்து வைத்த மகான் சஸ்பெண்டின் வைபவத்தை அவரும் அனுபவிக்க நேர்ந்தது தெய்வச்செயலே யாகும், போலும்.

### மன்னார்குடி தாசில்தார்

ஸ்ரீமான் M. K. ராமசாமியய்யர் வலங்கிமான் டிப்டி தாசில்தாராக மாற்றப்பட்டுவிட்டார். கும்பகோணம் தாசில்தாராயிருந்த ஸ்ரீமான் எஸ். மாணிக்கம் பிள்ளை மன்னார்குடி தாசில்தாராகப் போடப்பட்டு சீக்கினால் லீவு வாங்கிக்கொண்டு விட்டாராம். ஷையாருக்குக் கும்பகோணம் டிரஷரி சாவியைப் போக்கடித்ததற்காக ரெவினியூ போர்டாரால் 50 ரூ. அபராதம் விதிக்கப்பட்டதாம். ஷையார் கும்பகோணம் தாலுகா கிராம உத்தியோகஸ்தர்களின் வேலை நிறுத்த காலத்தில் அநேகரை சஸ்பெண்டு செய்தும் சிலரை வேலை இழக்கும்படி செய்தும், கெட்டிக்காரரெனப் பெயர் வாங்க மிகப்பாடு பட்டார். அதுமுதல் அமைதியாய் வேலைபார்க்க முடியாமல் வியாதியால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பது பரிதபிக்கத்தக்கதே! ஸ்ரீமான் ஹரிராவ் மன்னார்குடி தாசில்தாராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

### இணைத்த கிராமங்களைப்பிரித்தல்

கிராமங்களை ஒன்று சேர்த்ததைப் பிரித்து பழயபடி அவரவர்கள் வேலையை அவரவர்களுக்கு கொடுத்துவிட வேண்டியதற்காக சட்டசபை தீர்மானத்தை அனுசரித்து அட்வோகேட் ஜெனரல் ஒரு மசோதா. தயாரித்திருக்கிறார். இதனை நிர்வாக சபை அங்கத்தினர்கள் பரிசீலனை செய்து வருகின்றனர். நவம்பர் மீ கூடும் சட்டசபை கூட்டத்தில் கொண்டுவரப்படும் என்று தெரிய வருகிறது.

### லோகல் பண்டு ரோட்

தஞ்சைஜில்லா போர்டு மீட்டிங்கில் ஸ்ரீமான் V. பஞ்சாபகேசய்யர் அவர்களால் கொண்டுவரப்பட்ட அடியிற்கண்ட தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டு விட்டன. சென்ற மாதத்திய கிராமானுகூலனில் தஞ்சைஜில்லா போர்டு ரோட்டுகளின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் எழுதப்பட்டிருக்கும் வியாசத்தைஅனுசரித்து இத்தத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது ஜில்லா போர்டாரைப் பாராட்டுகிறோம். பிரசிடெண்டு இதை ஊக்கத்துடன் நிறைவேற்றி வைப்பாரென்று நம்புகிறோம்

1. இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிற மிமோராண்டத்தில் கோரியிருக்கிறபடி இரண்டு மைலுக்கு ஒருவராக மாதம் 1-க்கு ரூ 12-சம்பளத்தில் மண் ரோடுகளைப் பாதுகாத்தலுக்காக "ரோடு வேலைக்காரர்கள்" என்ற சிப்பந்திகள் நியமிக்கப்பட வேண்டுமென்று பிரசிடெண்டுக்கு போர்டு சிபார்சு செய்கிறது.

2. ஒருவரால் செய்யக்கூடிய மணல் பறப்புதல் ரஸ்தா பக்கங்களைச் சீர்திருத்தல், மேடுபள்ளம் சீரவுதல் முதலிய எல்லா மண்வேலைக்கு அவர்களை ஜவாப்தாரிகளாகச் செய்து, அவரவர்களுடைய எல்லையிலிருக்கப் பட்டமரங்களைப்பாதுகாத்துக் கொள்ளவேண்டும்.

3. ஒவ்வொரு மாதம் 20-ந் தேதிக்குப் பிற்பாடு ஓவர்சியர் அல்லது மேஸ்திரியின்கீழ் வேண்டும்போது ஒத்துமையாக அவர்கள் வேலை செய்யவேண்டும்.

4. ரோடு 16 மைல் நீளத்திற்கு அதிகமில்லாமல் ஒரு மேஸ்திரிஜவாப்தாரியாகஇருக்கவேண்டும். ஒருவன் செய்யக்கூடும் வேலையை விட அதிகப்படியான வேலை எல்லாவற்றிற்கும் மேஸ்திரியே ஜவாப்தாரியாகஇருக்கவேண்டும்.

5. வண்டிகள் மூலியமாக மண் மணல் வரவேண்டிய காலத்தில்டிபார்ட்மெண்டாரால் செய்யப்படவேண்டும் அல்லது கண்டிராக்டில் விடவேண்டும்.

6. மேஸ்திரிக்கு ரோடு வேலைக்காரர்கள் ஜவாப்தாரியாவார்கள். அவர்கள் இரண்டு பேரும் ஓவர்சியருக்கும் அதற்கு மேலுள்ள அதிகாரிகளுக்கும் ஜவாப்தாரியாவார்கள்

7. அடுத்த ஒவ்வொரு மாதம் 10-உக்குள்ரோடு வேலைக்காரர்களின் சம்பளம் கொடுபடவேண்டும்.

குறிப்பு:— மதிப்புரைக்காக அனுப்பியபுத்தகங்களும், பத்திரிகைகளும் வரப்பெற்றோம். அடுத்த சஞ்சிகையில் மதிப்புரைஎழுதப்படும்[ப-ர்]



# இந்திய கிராமங்களும், இந்திய நாகரிகமும்.

———:(o):———

(ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள், B.A., B.L., ஸப்-ஜட்ஜ், நாகபட்டணம்.)

### நாட்டுச்சிறப்பு.

நம்முடைய தாய் நாட்டின்சிறப்பின்உணர்ச்சி இக்காலத்தில் எல்லோருடைய மனதிலும் குடிகொண்டிருக்கும் விஷயம் எவராலும் மறுக்கமுடியாது. இமயமலைமுதல் கன்யாகுமரி வரையிலும் ஒரு புதிய கிளர்ச்சி தோன்றி எல்லோருக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும், பெருமையையும், ஆனந்தத்தையும் பெருக்கிக்கொண்டே வருகின்றது. கர்மபூமி, போகபூமி, புண்ணியபூமி என்று கொண்டாடப்பட்ட பாரதமாதாவின் வழிபாடு ஓங்கி வளர்ந்து, அவளுடைய மேன்மைகளை நன்கறிந்து அவளுக்குப் பணிசெய்வதே நம்முடைய பிறவிப்பயன் என்ற கருத்தும், உள்ளன்பும் இந்நாட்டில் பிறந்து வாழும் எவனுடைய மனதில் தான் விளங்கவில்லை. எப்படியாவது மிகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு பழமையான நாகரிகச் சிறப்புகளை இழக்காமல், புதிய சிறப்புகளையும் அறிந்து அடைந்து நம்முடைய தாய்நாட்டை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்ற பேரவா எங்கும் பரவியிருக்கிறது. அப்படி யிருந்தும், எண்ணத்திற்குத் தக்கவாறு பயன் இல்லை என்பது திண்ணம். கொஞ்சங் கொஞ்சமாகப் பழமைச் சிறப்புகளை நழுவ விட்டுக்கொண்டே வருகிறோம். புதுச் சிறப்புகளை நன்கறியாமலும், அடையாமலுமே இருந்துவருகிறோம்.

### கிராமப் பராமரிப்பு.

இதற்கு முக்கிய காரணம் நாம் நம்முடைய கிராமங்களைக் கவனியாமல் இருப்பதேயாம். கிருஷ்ண பரமாத்மா துரியோதனன் இராஜதானிக்குச் சென்றபொழுது அவ்விடத்தில் இருக்கும் பிரபுக்களை இது எவருடைய அரண்மனை, இது எவருடைய மாளிகை என்று வினவ, அவரவர்கள் தங்களுடையது, தங்களுடையது என்று மார்புதட்டி வீரியம் பேசினார்கள். பிறகு அந்த ராஜவீதியில் ஒரு குடிசையைக்கண்டு இது எவருடையது என்று கேட்க, விதுரர் இது தங்களுடையது என்றுரைத்தார். அதைக்கேட்டுக் களித்துக் கண்ணன் இவ்வளவு போகங்கள் நிறைந்த ஊரில் நமக்குக்கூட சொந்தவீடு இருக்கிறதா என்று அவ்விடத்திலேயே தங்கிவிட்டார். அதுபோல் பாரதமாதா கிராமத்தில் குடிசையில் குடியிருக்க அவளைப் பெரிய நகரங்களில் தேடினால் அவள் புலப்படுவாளா? அவள் எங்கே களிகூர்ந்து தங்குகின்றாளோ அங்கே நாம்சென்று வணங்கி வழிபட்டு வந்தனம் செய்தால், அவளுடைய திவ்ய தேஜோமயமான கடாக்ஷம் நம்மிடத்தில் இருக்குமே யல்லாது அவள் விரும்பாத இடத்திலும், அவள் இல்லாத இடத்திலும் அவளைத் தேடியோ, கொண்டாடியோ செய்யும் கார்யம் பயனற்றதேயாம்.

### நாகரிக வளர்ச்சி.

ரவீந்திரநாத் டாகூர் என்னும் புலவர் பெருமான் தன்னுடைய "சாதனம்" என்ற அருமையான நூலில் நம்முடைய நாகரிகத்திற்கும் க்ரீஸ் தேச நாகரிகத்திற்கும் முக்கியமான வேற்றுமை இருக்கிறதென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். இப்பொழுது உலகையெல்லாம் கவர்ந்து ஆண்டுவரும் மேனாட்டு நாகரிகங்களுக்கெல்லாம் தாய் நாகரிகமானது கிரிஸ்தேச நாகரிகம். அது பெரிய பட்டணங்களிலேயே பிறந்தது, நம்முடைய நாகரிகமோ தபோவனங்களில் பிறந்து, கிராமங்களில் வளர்ந்து வந்திருக்கிறது. பட்டணங்களில் பிறந்து வளர்ந்தவர்களுக்கு ஒற்றுமையாவது, உள்ளன்பாவது, கபடமின்மையாவது

இருக்காது. பெரிய கல் கட்டடங்களில் பிறந்து வளர்ந்து பக்கத்தில் இருக்கும் வீட்டில் குடியிருந்து வருகிறவர்கள்கூடத் தெரியாமல் சுயநலம், சுயமகிமையே மனதில் விளங்கிவரும் நாகரிகம் அந்த நாகரிகம். நம்முடைய நாகரிகமோ அப்படியல்ல; நாட்டில் பிறந்ததால் கர்வம் தெரியாது; கடவுள் அமைப்பான இயற்கை அழகு மறக்காது; எல்லாப் பிராணிகளிடத்திலும் பழக்கமும், தயையும் நிரம்பி இருக்கும். ஆகையால் ஒற்றுமையும், உள்ளன்பும், கபடமின்மையும், விவேகமும், வைராக்கியமும், பக்தியும், கிராமவாஸத்தில் விருப்பமும் மேலிட்டிருக்கும் நாகரிகம் நம்முடைய நாகரிகமே.

நகர வாழ்க்கை.

ஆகையால்தான் இந்தியர்கள் பெரும்பாலும் கிராமங்களில் வசித்து வந்தார்கள். எப்பொழுதும் நம்முடைய நாகரிகத்திற்கு உயிர்நிலையான பெரிய நகரங்கள் உண்டு. "அயோத்யா, மதுரா, மாயா, காசீ, காஞ்சீ, அவந்திகா, புரீத்வாரவதீ சைவ சப்தைதே மோக்ஷ தாயகா:" என்னும் ஸ்லோகம் மிகவும் பிரசித்தமானது. ஆனாலும், அந்த நகரங்கள் அநேக கிராமங்களுக்கு நடுநாயகமாக இருந்தனவே தவிர அக்கிராமங்களின் சிறப்புகளை அட்டைகள்போல உறிஞ்சி, அக்கிராமவாஸிகளை தன்னிடமே காந்தம் ஊசிகளைப் போல இழுத்துக்கொள்ளும் நகரங்கள் அல்ல ஆகையால்தான் அக்காலத்தில் விளங்கின நகரங்கள் பாரதமாதாவின் கிருபாமய நோக்கத்திற்குப் பாத்திரமாகவும், லக்ஷ்மி சான்னித்யம்பொருந்தியும் விளங்கின. இக்காலத்திய நகரங்களோ, அகத்தின் உண்மையான சிறப்பை யிழந்து, அகம்பாவம் நிறைந்து, கிராமங்களைப் பாழாக்கித் தன்னிடத்திலும் சிலகொழுத்த பாபியான பணக்காரர்களும் அநேக எளிய பாபியான ஏழைகளும் நிறைந்து இகபர சாதனம் ஒன்றும் இல்லாமல் வெளிமயக்காகவும், உள்ளழுக்காகவும் இருப்பது நமக்கு நன்றாகத் தெரியவில்லையா?

சுபிக்ஷம் வருவதெங்ஙனம்?

நம்முடைய தேசத்தின் விபத்துக்களும், அமங்கலங்களும் இவ்வளவுடன் நிற்கவில்லை. கிராமங்களில் உள்ளவர்கள் பலர் வெளிநாடுகளுக்குக் குடியேறிப் போகிறார்கள். "இக்கரைக்கு அக்கரைப்பச்சை" என்பதுபோல அவ்விடங்களில் பணம் ஏராளமாகக்கிடைக்கும் என்றபிரமையால் மயங்கிச்சென்று, பிறகு மிகுதியான துயரத்தையும் பச்சாதாபத்தையும் அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். தன்கையைத் தானே வெட்டி எறிந்துவிட்டால் கையும் உடலும் எப்படித் துடிக்குமோ, அப்படியே குடியேறினவர்களும் தாய்நாட்டில் இருப்பவர்களும் துடிக்கிறார்கள். குடியேறினவர்கள் சிலர் எந்தப்பணத்தின் மேல் ஆசையால் போனார்களோ, அதுவும் கிடைக்காமல் பலம்குன்றி உடலொடுங்கிப் பிணிமிகுந்து கொத்துயிரும் கொலையுயிருமாக ஜன்மதேசம் திரும்பிவந்து சேருகிறார்கள்! இத்தன்மையான சமூகப் பிணிகளைப்பற்றி நினைப்பவர்களும் தயையுடன் கூடினவர்களும் பிணிநீங்கும் மருந்து தெரிந்தவர்களும் இல்லாத சமூகமாக நாம். ஆய்விட்டோம். இதற்கெல்லாம் மூலாதாரமான அமங்கலம் எதென்று அறிந்து அதை மாற்றி மங்களங்களை அடைய நம்மவர் விடாமுயற்சியைக் கைக்கொள்ளவேண்டும்.

கிராமவாஸ மேன்மை.

நம்முடைய தாய்நாட்டில் சுமார் ஒன்பது லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. நம்முடைய சங்கத்தார் பெரும்பாலும் கிராமவாஸிகளாக இப்பொழுதும் இருக்கிறார்கள். மெட்காப் (Metcalfe) என்பவர் ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாக இருந்ததாகவும், இந்தியா முழுவதையும் குடியரசு சமூகம் என்று சொல்லலாம் என்றும் சொல்லியிருக்கிறார். அப்படி இருந்த தேசத்தில் குடியரசு போய் 'குடிவரவும்' ஒற்றுமை போய் 'வறுமைவரவும்' இருக்கவேண்டுமா? கிராமங்களைப் பாழாக்கி இருக்கும் கிராமவாசிகளும் பயிரிடுவதிலும், கிராமக்கைத்தொழில்களிலும் ஆசையில்லாமல் வம்பு வழக்குகளில் இறங்கி, ஒருவரை ஒருவர் வெறுத்து எதிர்த்துக்கெடுத்தால் எப்படி நாட்டின் செல்வம் தழைத்தோங்கும்? "கெட்டும் பட்டணம்சேர்" என்ற பழமொழிமாறி "கெடப் பட்டணம் சேர்" என்றே சொல்லவேண்டும். முன்னாட்களில் நகரங்களும் கிராமங்களும் தபோவனங்களும் 'பூர்பவஸ்ஸுவ:' என்ற மூவுலகங்கள்போல ஒற்றுமையாயுறவாடி அன்புபாராட்டி இருந்திருக்க, இப்பொழுது அன்யோன்யாச்ரயம் போய் அன்யோன்ய த்வேஷம் வந்து சேர்ந்திருக்கிறது. தபோவனங்கள் அநேகமாகப்போய் விட்டன. கிராமங்கள் சோபையை இழந்து வருகின்றன, நகரங்கள் விஷ விருட்சங்களைப்போலப் பெருகிப் பக்தியில்லாமல். ஒற்றுமையில்லாமல், சுகம் யில்லாமல், சில பணக்கொழுப்பு மிகுந்த தனிகர்களும் அநேக நித்தியதரித்திரர்களும் நித்திய பிணியால் வருந்துகிறவர்களுமான ஏழைகளும் நிரம்பி "நித்திய கண்டம் பூர்ணாயுஸ்" என்று சொல்லுவதுபோல மரணத்திற்குஸமானமான உயிர் வாழ்க்கையை அனுபவித்து சாக்கடைப் புழுக்கள்போல இருந்துவருகின்றன. இதுதானா மேன்மை? இதுதானா உத்தம சுகம்; இதுதானா கடவுளின் கட்டளை? மேற்கு நாடுகளில் இப்பொழுது இத்தகைய அபாயகரமான நகரவாஸத்தை மாற்ற வேண்டுமென்று சொல்லியும் நடத்தியும் வருகிறார்கள். தோட்ட நகரங்கள் (Garden cities) அமைக்க வேண்டுமென்று முறையிடுகிறார்கள், நகர நிர்மாணம் (Town Planning) என்ற விஷயத்தைப்பற்றிக் கெட்டிஸ் (Geddes) முதலானவர்கள் அருமையான எண்ணங்களை வெளியிட்டிருக்கிறார்கள், வெகு விரைவான யந்திரத் தொழிற் சாலைகளை (Factories) கண்ட இடங்களில் ஏற்படுத்தி ஜனங்களை மந்தை மந்தைகளாகத் திரட்டி ஈசன் அவர்களை மனிதர்களாகப் படைத்தாலும் நாம் அவர்களை மாடுகளாக மாற்றும் சக்தி கொடிய அரக்கர் சக்தியே ஒழிய தெய்வீகம் பொருந்திய தல்ல என்று வற்புறுத்திச் சொல்லி வருகிறார்கள் ரஸ்கின், மாரிஸ் (Ruskin, Morris) முதலியவர்கள் இந்த விஷயங்களில் அதிக ஊக்கத்துடன் உபதேசம் செய்திருக்கிறார்கள்.

கிராமவாஸ முயற்சி.

இப்படி அவர்கள் சொல்லிவரும் பொழுது நாம் கிராமங்களைப் பாழடைய விடுவது நியாயமல்ல. குடியும், சூதாட்டமும், சோம்பலும் அவைகளில் குடியிருக்கவிட்டு, நகரங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் நாம் போகலாமா? கிராம சுகாதாரங்களைக் கெடுத்து "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை மறந்து கிராம சமுதாயங்களை எல்லாம் ஆக்கிரமித்து, குளங்களை அசுத்தம் பண்ணி துத்து கோவில்களைப் பூஜையில்லாமல் பண்ணிப்பெருச்சாளிகளுக்குத்தானம் செய்து தேவாதாயங்கள் முதலியவைகளைப்பிடுங்கிக் கட்டிக்கொண்டு புராணங்கள் பஜனைகள் ஒன்றும் இல்லாமல் காப்பிக்கிளப்புகளும் சூதாடும் இடங்களும் வம்பர் மகாசபைகளும் விருத்தியாகும்படி முயற்சி எடுத்துக்கொண்டு வருவதுபுண்ணியமா புருஷார்த்தமா?

முயற்சி திருவினை யாக்கும்.

இந்த விஷயங்களைப்பற்றியெல்லாம்முயற்சி எடுத்து உபதேசம் பண்ணிக் கிராம மங்களங்களைத் திரும்பி வரும்படியாகவும் தழைத்தோங்கும் படியாகவும் செய்யவேண்டியது படிப்பாளிகளாகவும் உழைப்பாளிகளாகவும் இருக்கும் நம்மைப்போன்ற நகரவாஸிகளின் கடமை. கலாசாலைகளில் படித்துத்தேறி காமறிந்த கல்வியின் சாராம்சங்களை மகா ஜனங்களுக்கு அளிப்பதாகச் சபதம்பண்ணி பெரும்பதவிகளை யடைந்து வயிறையே தெய்வமாகக்கொண்டு வழிபட்டு வணங்கிப் பணத்திலும் பட்டங்களிலும் அதிகாரங்களிலும் ஆசைமிகுந்து பிணிகளால் பீடிக்கப்பட்டு இகபரசுகம் ஒன்றுமறியாமல் தர்மத்தை வெறுத்து ஈசனைமறந்து வெளிமயக்கமாகப் பேசிநடந்து மதயானைகள் போலிருக்கும் நகரவாசிகளான நம்மால் உலக நன்மைக்காகவோ நம்முடைய பரலோக சுகத்திற்காகவோ என்ன செய்யப்பட்டு வருகிறது? ஒன்றுமே யில்லை. அப்படிச் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அப்படிச் செய்யாமல் வாழ்நாளை வீணாக்கும் வழி தவறு என்ற எண்ணமுமாவது இருந்தால். அது ஒரு நாளிலாவது திருவினையாக்கும் முயற்சிக்குக் காரணமாகும். அதுகூட இல்லாவிட்டால் எப்படி நமக்கு முன்னேற்றமும் ஒற்றுமையும் மற்ற நாடுகளின் மதிப்பும் கடவுளின் அன்பும் அனுக்கிரகமும் கிடைக்கும்?

223464

### கிராமவாழ்க்கைத் துணை

ஆகையால், நாம் நன்றாக அறிய வேண்டிய விஷயம் இந்தியக் கிராமங்களுக்கும் இந்திய நாகரிகத்திற்கும் இருக்கும் உள்ளன்பு ஒன்றையொன்று தழுவியிருத்தலுமே, அவைகளின் அன்னியோன்யஆசிரயத்தை மறந்து விட்டோமேயானால், நமக்கு ஒன்றும் கைகூடாது. ஒற்றுமையிழந்து துவேஷம் ஏறிச் செல்வம் இழந்து வறுமை அதிகரித்துக் கிராமங்கள் பாழாகிப், பாபமயமான நகரங்கள் அதிகமாகிக் கொண்டுவரும் வழிகளைச் சீர்திருத்த வேணும். கிராம சுகாதாரங்களையும், கிராமப் பள்ளிக்கூடங்களையும், புத்தகசாலைகளையும், கிராம சங்கீதசாலைகளையும், நாடகசாலைகளையும், கிராம விவசாயத் தொழில்களையும், கிராம பஜனைமடங்கள், சத்திரங்கள், குளங்கள், கோயில்கள் முதலியவைகளையும் கவனித்துமேன்மை நிலைக்குக் கொண்டுவந்து வைத்துக்கொள்ளவேணும். கிராமமே பாரதமாதாவின் குடியிருக்குமிடம் என்றறிந்து அதைப் பரிசுத்தமாகவும் சுந்தரமாகவும் மோகனமாகவும் வைத்துக்கொள்ளவேணும். முக்கியமாக ஊக்கமும் உற்சாகமும் சமூக ஸேவையில் ஆனந்தமும் இருக்கவேணும். மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லிருக்கும் உத்தம உத்சாக சாதனமான உபதேசத்தை மறக்காமலிருக்கவேணும் என்பது திண்ணம்.

நாத்மான மவ மன்யேத
பூர்வாபிரசம்ருத்திபி:
ஆம்ருத்யோ: ச்ரியமன்விச்சேத்:
னைநாம் மன்யேத துர்லபாம்:

(முன்னிருந்த செல்வக் குறைவுகளால் நம்மை நாம் இகழ்ந்து வருந்தக் கூடாது. வாழும் நாளெல்லாம் மங்களத்தைத் தேடவேணும். அதை அடைவது அரிதென்று எண்ணவே கூடாது.)

(இந்துநேசன்.)

**Krishna Chalk works.**

*PANCHASHARA AGRAHARAM*
KUMBAKONAM.

சுதேச கைத்தொழிலை ஆதரியுங்கள்.

இந்த வொர்க்ஸில் ஸ்கூல்களுக்கு அத்தியாவசியமாய் வேண்டிய வெள்ளை சாக்பீஸ்களும் கலர் சாக்பீஸ்களும் (Dry) டிரை கலர் பாக்ஸ்களும் ஆயில் கலர் பாக்ஸ்களும் சிலேட் பென்ஸல்களும் மிக நேர்த்தியாக யந்திரங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டு வருகிறது. காலேஜ், ஹைஸ்கூல், போர்ட்ஸ்கூல், முனிசிபல் ஸ்கூல், பிரைமெரி ஸ்கூல் முதலிய பல கல்வி ஸ்தாபனங்களுக்கு சப்ளை செய்து நற்சாக்ஷி பத்திரம் பெற்றிருக்கிறது.

அயல்நாட்டுச் சாக்குகளைவிட மேலானது. கூடிய சீக்கிரத்தில் குருவிபிள்ஸ்களும் (குகைகள்) பிளாக்லெட் பென்ஸல்களும் காப்பியிங் பென்ஸல்களும் நல்ல தினுசாக தயார் செய்யப்படும்.

ஏஜண்டுகள் தேவை! வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

விலை விபரங்களுக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்

**கிருஷ்ண சாக் வொர்க்ஸ்.**

பஞ்சாக்ஷர அக்கிரஹாரம்.
கும்பகோணம்.



## கிராமங்களில் கூட்டுறவு ஜலப்பாய்ச்சல் சங்கம்.

———:(o):———

(ஸ்ரீமான் எஸ். நாராயணசாமி ஐயர், மிலட்டூர்.)

(100-வது பக்கம் தொடர்ச்சி.)

இவ்வைக்கிய முறையில் நிலங்கள் சிறுதுண்டுகளாகப் பிரிக்கப்பட ஏதுவில்லாமலே யிருந்துவந்தன. ரூபாய் தீர்வையானது குறைவென்று தோன்றின போதிலும் ஜனங்களுக்கு ஆதியில் அதிக கஷ்டத்தையேகொடுத்துவந்தது. ஏக்ரா ஒன்றுக்கு ரூபாய் 9 அல்லது 10 ஏற்பட்டிருந்த போதிலும் இந்த 10 ரூபாய்க்கு 10 முதல் 15 கல நெல் விற்கவேண்டி வந்தபடியாலும் மிராசுதார்களுக்கு ஏக்ராவுக்கு 4 அல்லது 5 கலம் மிஞ்சுவது பெரும் கஷ்டமாக விருந்தது. ஆகையினால் ஜனங்கள் கிஸ்தி செலுத்துகிறதற்கு முடியாமல் நிலங்களை ரொக்கப் பணக்காரர்களுக்கு சொற்பதுகைக்கே விற்கவேண்டிவந்தது. அப்படியும் நிலங்களை விற்றுக்கொடுக்க முடியாதிருந்த ஜனங்களிடத்தில் கெவர்ன்மெண்டார் நிலங்களை ஏலம் போட்டு வசூல்செய்ய நேர்ந்ததால்கெவர்ன்மெண்டாருக்குக்கிராம நிலங்களைப்பிரித்து அனுபோகப்படி பட்டா செய்யவேண்டியது அவசியமாயிற்று. அந்த ஏற்பாடு, கிஸ்தியைக்கொடுக்க முடியாமலும் நிலங்களை விற்கமுடியாமலும் திண்டாடின ஜனங்களுக்குநிலம்விற்பதற்கு சௌகரியமாயிருந்தபடியால் ஜனங்கள் திருப்தியடைந்து கரையீட்டை யழிப்பதற்குச் சாதகமாகவேயிருந்தனர். அப்படி கரையீடும் 1875-ஹு அழிந்துவிட்டது.

கரையீட்டு காலத்தில் கிருமத்தின் பாய்வாய்க்கால், வடிவாய்க்கால் முதலியவைகளை வெட்டி மராமத்து செய்யவும், பயிர்காவல். பட்டறைகாவல், முதலியது போடவும் கிருமத்திய எல்லாஜாதி ஜனங்களுக்கும், விஷவைத்தியம், சாதாரண வைத்தியம், முதலியவைகள் செய்வதற்கும் சுகாதார அபிவிர்த்தி செய்வதற்கும் ஊரிலுள்ள எல்லாஜாதி ஜனங்களும் தனித்தனியாய்த்தொழுகிற கோவில்களுக்குப் பூஜை செய்வேத்தியம் உற்சவங்களுக்கும் இன்னும் மற்றகிரும சௌகரியமானவேலைகள் செய்வதற்கும் ரூபாய் 7000-க்கு மேலேயே சர்க்கார் கிஸ்தி செலுத்தக்கூடிய சுமார் 200-வேலி நஞ்சை புஞ்சை நிலங்கள் சமுதாயமாகக் கிஸ்தியன்னியில் பொதுவில் வைக்கப்பட்டு ஷெடி காரியங்கள் சௌகரியமாய் நடந்து வந்தன. ஆங்கிலேய அரசாங்கம் வந்தவுடன் தானியத்தை மாற்றி சர்க்கார் கிஸ்தியை நாணயரூபமாய் வசூல்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டவுடன் கிஸ்தியன்னியில் கிரும பொதுவுக்கு மேல்கண்டபடி வைக்கப்பட்ட நிலங்களுக்கும் தீர்வை விதித்து வசூலிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால் கிரும கரையீடு அனுஷ்டானத்திலிருந்து வந்ததினால் ஷெடி பொது நிலங்களின் கிஸ்தியை மேலே சொன்ன 510 பங்காளிகளின் பேரில் வீதித்து வசூல் செய்து கொண்டு வந்தார்கள். பிறகு 1890-ஹுத்திய செட்டில்மெண்டில் சமுதாய நிலங்களைத்தனிப்பட்டாவாகச்செய்து பங்குகளின்பேரில் வீதித்து வசூல் செயது வந்ததை நிறுத்திவிட்டார்கள். அதன் காரணமாகவும் கரையீடு அழிந்ததினாலும் பல மிராசுதார்கள் ஊரில் இல்லாதிருந்ததினாலும் ஷெடி சமுதாய நிலங்களின் கிஸ்தியை எல்லாரிடமும் சரியாய் வீதித்து வசூலித்து சர்க்காருக்குச்செலுத்தி ஷெடிசமுதாய நிலங்களைக்காப்பாற்ற சக்தியற்றவர்களாய் விட்டார்கள். சமுதாய நிலங்களில் பெரும்பாகம் சர்க்கார் கிஸ்தி பாக்கிக்காக வருஷா வருஷம் கொஞ்சம் கொஞ்சமாய்ஏலத்தில் விடப்பட்டுப் போய் விட்டன. பொதுவாய்ச் செய்யவேண்டிய வேலைகளும் செய்யமுடியாமல் கிருமத்தார்களுக்கு கஷ்டமும் கஷ்டமும் உண்டாகிவிட்டன. மிராசுதார்களும் குடிகளும் கரையீடு அழிந்ததினாலும் அரசாட்சி முறையில் திருட்டுகளை கவனிக்கத்தனி போலீஸ் டிபார்ட்மெண்டும் வாய்க்கால் முதலியவைகளின் மராமத்தை கவனிக்க இஞ்சினீர் டிபார்ட்மெண்டும், அற்ப கிரிமினல் கேசுகளைக்கூட விசாரிக்க மாஜிஸ்ட்ரேட் கோர்ட்களும் அற்ப சிவில்கேதுகளை விசாரிக்க முன்சிப் கோர்ட்களும் ஏற்பட்டு ஜனங்கள் தங்கள் காரியங்களைக் கிருமத்தார்களைக்கொண்டேசெய்துகொண்டு சௌகரியங்களை அடைந்துகொண்டு வந்த கிரும கட்டுப்பாடாகிற ஒரு உன்னதமான ஏரியிலிருந்து ஜலம் கசிந்து போகும்படியான மேற்சொன்ன பலஇலாக்காக்களாகிற பல வாய்க்கால்கள் ஏற்பட்டு விட்டதினால் கிருமக்கட்டுப்பாட்டிற்குள்பட்டுநடக்கும் தன்மையானஷெடி ஏரிஜலம் வடிந்து ஏரியும் வறண்டு போய்விட்டது. கட்டுப்பாடு கொலையவே மேலேகண்டபொதுக்காரியங்கள் நடைபெறுவதும் குறைந்து விட்டது.

இதில் ஜனங்களை வெகுவாக கஷ்டப்படுத்தின வாய்க்கால் வெட்டு மராமத்துகளைப்பற்றி சற்று ஆராய்வோம். 25 வேலி அதாவது 160 ஏக்ரா நஞ்சை நிலங்

களுக்கு மேற்பட்டு பாயும் இத் தஞ்சை ஜில்லாவிலுள்ள எல்லாப்பாய்வாய்க்காலையும் கோடை காலத்தில் வருஷத்துக்கு ஒரு தடவை சர்க்காரில் வெட்டிக் கொண்டு வந்தார்கள். அந்தப்படி வெட்டித்தருவதாக தஞ்சாவூர் கலெக்டர் 1883-௵ அக்டோபர் ௴ 3௳ யில் ஒருசர்க்யுலரும் விடுத்திருக்கிறார்.

1890-ம் ௵ செட்டில்மெண்டில் கிஸ்தியைப்பாசன வசதியைக்கவனிக்காமலே நிலத்தின் மண்ணை மாத்திரம் பரிசோதித்து நிலத் தீர்வை உயர்த்தப்பட்டவுடனே மேலே சொன்ன சர்க்கியுலரில் கண்டபடி தாங்கள் ஏற்றுக்கொண்ட வாய்க்கால் வெட்டு மராமத்தை செய்துகொடுக்க இஞ்சினீயர் டிபார்ட்மெண்டார் பின் வாங்கினார்கள். உடனே இவ்வூருக்குப் பாயும் அச்சுதகாவேரி என்கிற வாய்க்காலை வெட்டித் தரும்படி மேற்படி சர்கியுலரையும் குறிப்பிட்டு மனுசெய்துசுமார் இரண்டு வருஷகாலம் போராடினதின் பேரில் ரூபாய் 2250-க்கு திட்டம் தயாரித்து வாய்க்கால் வெட்ட கண்டிராக்ட் விட்டதின்பேரில் ரூபாய் 500-க்குத்தான் வேலை நடந்தது. வெள்ளம் வந்துவிட்டதினால் பாக்கி வேலை செய்யப்படவில்லை. அடுத்த வருஷமும் பாக்கித்தொகையைக்கொண்டு வாய்க்காலை வெட்டும்படி பலதரம் போராடியும் பிரயோஜனப்படவில்லை. கடைசியாக "It is waste of Government money in as much as the channel is silted up again" வாய்க்கால் மறுபடியும் எக்கலடித்து விடுவதினால் வாய்க்கால் வெட்டில் சர்க்கார் பணத்தை செலவழிப்பதுவீண் என்று சொல்லி விட்டார்கள். உள்வாய்க்கால்களும் மிராசுதார்கள் ஒன்றுசேர்ந்து வெட்ட முடியாததினாலே ஜலப்பாய்ச்சல் வசதி குறைவும் இஞ்சினீயர் இலாக்காவில் வாய்க்கால்களுக்கு மதகுகள் கட்டி ஷ்குரு ஷட்டர்கள் போட்டதினால் நிலங்களுக்கு வண்டல் பாயாமல் பூசாரக்குறைவும் ஏற்பட்டு விட்டன. இந்த ஸ்திதியில் விளைவு குறைவுபட்டதென்று சொல்லத் தேவையில்லை. நிலக்காரர்கள் கடன்பட்டுக்கொண்டே வருகிறார்கள். சில பெரிய நிலக்காரர்கள் தங்கள் நிலங்களில் சில பாகத்தை விற்று கடனைத்தீர்த்தபோதிலும் பிறகும் கடன் வாங்கி கடன்காரர்களாகவே இருந்து வருகிறார்கள். சொற்ப நிலங்களையுடையவர்கள் என்றைக்கும் தங்கள் கடனைத் தீர்க்ககூடாத ஸ்திதியில் இருந்து வருகிறார்கள். இதன் பலனாக சர்க்கார் கிஸ்தி பாக்கிக்காக இந்த கிராமத்திலும் இந்த ஜில்லாவில் பல இடங்களிலும் நிலங்கள் ஏலம் போடப்பட்டு வந்தன. நிலத்தை ஏலத்தில் விட்டுவிடும்படியான இந்த விஷயம் தாங்க முடியாத நிலத்தீர்வை உயர்வினால்தான்என்று ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே முதலிய உத்தம தேசாபிமானிகள் எடுத்துச்சொல்லவே, நிலத்தை ஏலத்தில் போடுவதைக்கொண்டு சொற்ப நிலங்களையுடைய மிராசுதார்கள் நிரந்தரக் கடனாளியாயிருப்பதற்குக் காரணம் அவர்கள் அதிக வட்டிக்குக்கடன் வாங்கும்படி ஏற்படுவதுதான் என்று சொல்லி வந்ததுங்கூட அதினின்றும் அவர்களைத்தப்புவிக்க இந்த ஐக்கியசட்டத்தை1904௵ ஏப்ரல் மாதத்தில் இயற்றினார்கள். பலவிடங்களில் பல சங்கங்கள் ஏற்படுத்தி குறைந்தவட்டிக்குப்பணம் கிடைக்கும்படியான சௌகரியங்களைச் செய்து வந்தார்கள். இப்பவும் செய்து, கொண்டும் வருகிறார்கள். ஆனால் உத்தேசித்த அனுகூலம் கிடைக்கவில்லை. நிலக்காருடைய கடனும் தீர்ந்தபாடில்லை. அதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்க இவ்வைக்கிய இலாக்காவில் முயன்று வருகிறார்கள். அதற்கு உண்மையான காரணம் அதிக நிலத் தீர்வையோடுகூட பூசாரம்குறைந்து விளைவு குறைவுபட்ட காரணம்தான். பூசாரக்குறைவை அறிந்து அதை நிவர்த்திக்க நூதன முறையில்கண்டுபிடித்த ரசாயன எருக்களைக்கொண்டு விருத்திசெய்து காண்பிக்கவும் நூதன முறையாய்ச்சாகுபடி செய்து விளைவை ஜாஸ்திப்படுத்தி காண்பிக்கவும் உத்தேசித்து இந்தஜில்லாவிலும்விவசாயபண்ணைகளைஏற்படுத்தியிருக்கிறார்கள். இதிலும் அதிகப்பிரயோஜன மிருப்பதாய்த் தெரியவில்லை. விளைவு குறைவுக்குப் பூசாரக் குறைவு ஒரு காரணமாயிருந்த போதிலும் காலத்தில் சாகுபடி செய்வதற்கும் சாகுபடி செய்யப்பட்டபயிர்களுக்குத்தட்டில்லாமல் காலாகாலங்களில் ஜலம் கிடைக்கும்படி செய்யவும் சரியான பிரயத்தினம் செய்யவேண்டியது அவசியமென்று கெவர்ன்மெண்டார் உணரவில்லை. குடிகள் உணர்ந்தும் அதைச்செய்துமுடிக்கப்பணமில்லாதவர்களா யிருப்பதோடுகூட எல்லா மிராசுதார்களையும் சேர்த்து அதைச்செய்து முடிக்கும்மார்க்கத்தைக் கண்டுபிடித்து நன்மையடையச்சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள்.

அபூர்வமாய்ச் சில கிராமங்களில் இதில் ஆதரம் கொண்ட சில மிராசுதார்கள் மற்றமிராசுதார்களைக்கூட்டி பாய்ச்சல் வாய்க்கால்களை வெட்டி பூர்ணசவுகரியங்களை அடையாவிட்டாலும் ஏதோ சொல்ப சௌகரியங்களை அடைகிறார்கள். சாகுபடி செய்யப்பட்ட பிறது மத்திய காலத்தில் ஜலத்தட்டு ஏற்பட்டால் அவசரமாய்எல்லாரையும் கூட்டி ஜலத்தட்டை நிவர்த்திக்க முடியவில்லை. பல நிலக்காரர்கள் ஊரில் இல்லாமல் தன் ஜீவனத்துக்காக வெளியூருக்குப் போயிருக்கிறார்கள். அவர்களுடைய ஆதிரவில்லாமல் போகிறது.

(தொடரும்)



# பாங்குகளின் முறையும், அவைகளின் உபயோகமும்.

(ஒரு பாங்க் காஷியர் எழுதுகிறார்.)

(116-வது பக்கம் தொடர்ச்சி.)

தவிர, பாங்கில் நடைமுதல் கணக்குள்ள இருவர்கள் ஒருவருக்கொருவர் பணம் கொடுக்க வேண்டி யிருந்தால், கொடுக்கவேண்டிய தொகைக்கு ஓர் செக் எழுதி அந்தச் செக்கின் குறுக்கே இரண்டு சம அகலமுள்ள கோடுகள் கிழித்து இன்னாருடைய கணக்கில் வரவு வைத்துக்கொள்ளவும் என்று எழுதி பாங்கிக்கு அனுப்பி விட்டால் பாங்கர்கள் அதேமாதிரி வரவு வைத்துக் கொண்டுவிட்டு சம்பந்தப்பட்ட டிபாசிடர்களுக்கும் தெரிவித்துவிடுவார்கள். இம்மாதிரிகுறுக்குக் கோடுகள் போட்டனுப்பிய செக்குக்கு 'கிராஸ்டு செக்' (Cr.ssed Cheque) என்று பெயர் கிராஸ்டு செக்குகளுக்கு பாங்கர்கள் பணம் கொடுக்க மாட்டார்கள். கணக்குகளில் வரவு வைத்துக் கொள்ளத்தான் அதிகார முண்டு. கிராஸ்டு செக்கானது, கெட்டுப்போய் விட்டாலும் அதைக் கொண்டு அயல் மனுஷியாள் ஒருவரும் பாங்கில் பணம் வாங்கிவிட முடியாது. ஒரு விடத்திலிருந்து மற்ற விடத்திற்குப் பணம்அனுப்ப வேண்டியவர் பெயருக்கு ஓர் செக் எழுதி அதைகிராஸ் செய்து சாதாரணத் தபாலில் அனுப்பி விடலாம். மேற்கூறியவாறு செக் கெட்டுப்போய் விட்டாலும் திருட்டுத்தனமாய் செக்கை மாற்றித் தொகையை எடுத்துக்கொள்ள முடியாது. இதனால்நோட்வாங்கி அதைஇன்ஷூர்செய்து அனுப்ப வேண்டிய தொந்திரவு நீங்கும். ஒருவர் பிறருக்குக் கொடுக்கவேண்டிய தொகைகளுக்குச்செக்குகள் மூலியமாய்க் கொடுப்பதானது எவ்வளவு சௌகரியமாய் இருக்கிறதென்பதை மேற்கூறியவாறு காண்க.

நடைமுதல் கணக்கு சம்பந்தமாய்ச்செக்குகள் எழுதப்படுவதி லுள்ள சௌகரியங்கள் என்னென்னவென்றுமேலே சொன்னோம் மற்றப்படி நடைமுதல் கணக்கு வைத்திருக்கிறவர்களுக்குப் பாங்கர்கள் என்ன சௌகரியங்கள் செய்கிறார்கள் என்று இப்போது கூறுவோம். (1) வியாபாரியோ, அல்லது பெருத்த முதலாளியோ, தன்னிடம் அன்றன்று சேர்ந்த தொகைகளைக் கையில் வைத்துக்கொண்டு பந்தோபஸ்தாகப் பாதுகாத்துக் கொண்டு இராமல் அந்தத்தொகைகளை அப்போதைக்கப்போது பாங்கர்களிடம் தன்னுடைய நடைமுதல் கணக்கில் கொண்டு வரவு வைத்துவிடலாம். (2) அப்படிப் போடப்பட்ட தொகைகளை பாங்கர்கள் எந்த நிமிஷத்தில் கேட்டாலும் கொடுக்கத் தயாராக விருக்கிறார்கள். (3) தனக்குண்டான தஸ்தாவேஜுகளை பாங்கர்களிடம் ஒப்புவித்து தனக்கு வரவேண்டிய தொகைகளை வசூலித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டால் பாங்கர்கள் வசூலித்துக்கொடுக்கிறார்கள். (4) தனக்குண்டான சகல தஸ்தாவேஜுகள், விலையுயர்ந்த சாமான்கள் ஆபரணங்கள் முதலியவைகளை ஜாக்கிரதையாய் வைத்துக்கொள்ள வேண்டுமென்று பாங்கர்களிடம் கொடுத்தால் அதே மாதிரி ஜாக்கிரதையாய் வைத்துக்கொண்டு வேண்டிய போது திருப்பிக்கொடுத்துவிடுவார்கள். (5) துரைத்தனத்தாரின் கடன் பத்திரங்கள் (Government promissory notes) டிபாசிடரிடம் இருந்தால் அவைகளைப்பாங்கில்கொடுத்து வைத்திருக்கலாம்.

பாங்கர்கள் அப்பத்திரங்களை தங்களிடம் ஜாக்கிரதையாய் வைத்திருப்பதோடுகூட அவைகளின் வட்டித்தொகையை கெடுத் தேதியில் தவறாமல் வசூலித்து டிபாசிடரின் கணக்கில் வரவு வைத்துக்கொண்டு அவ்விஷயத்தை அப்போதைக்கப்போது டிபாசிடரிடம் தெரிவித்துக் கொண்டுமிருப்பார்கள். (6) கொடுக்க வேண்டிய தொகைகளுக்கு செக் கொடுப்பதானது கொடுத்த பணத்

திற்கு ரசீதாகவும் ஆகின்றது. (7) டிபாசிடருக்கு வரவேண்டிய தொகைகளை பாங்கர்களிடம் சொல்லி வருவிக்கச் சொன்னால் அவர்கள் ஒரு பைசா கூட குறையாமல் முழுத்தொகையையும் வாங்கி விடுவார்கள். அப்படிக்கில்லாமல் டிபாசிடரே தன் பணத்தை வாங்குவதானால் தாக்ஷண்யத்திற்குட்பட்டு ஏதாவது சொல்ப தொகை தள்ளிக் கொடுக்கும்படி நேரிடும். இவ்வித வியாபாரத்திற்கு பாங்கர்கள் இடம் கொடுக்க மாட்டார்கள்.

நடைமுதல் கணக்கு வைத்திருப்பதால் டிபாசிடருக்கு உள்ள சௌகரியங்களை மேலே எடுத்துச் சொன்னோம். டிபாசிடருக்கு பாங்கர்கள் இவ்வளவு வேலை செய்வது எதற்காக? இம்மாதிரியாக டிபாசிட்டுகளினால் பாங்குக்கு என்னவிதமான லாபமிருக்கிறதென்று சுபாவமாய்க்கேள்வி பிறக்கும். பாங்கர்கள் நடைமுதல் கணக்கு வைத்துக்கொள்ள சில விதிகள் ஏற்படுத்தியிருப்பார்கள். அதாவது ஒவ்வொரு நடைமுதல் கணக்கிலும் டிபாசிடருடைய பணம் இத்தனை ரூபாய்க்குக் குறையாமல் எப்போதும் இருக்க வேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்திஇருப்பார்கள். அம்மாதிரி ஒரு பாங்கில் 200 பேர் நடைமுதல் கணக்கு வைத்துக் கொண்டிருந்து பாங்கின் விதிப்படி ஒவ்வொரு நடைமுதல் கணக்கிலும் குறைந்தபக்ஷம் ரூபாய் நூறு சாசுவதமாக விருக்கவேண்டுமென்றிருந்தால், பாங்கர்களுக்கு ரூ 20000 சாசுவதமாகவிருக்கும்பாங்கர்கள்நடைமுதல்கணக்குகளிலுள்ள பணத்திற்கு மிகுந்தகுறைவானவட்டிதான் கொடுப்பார்களாகையால் இந்த 20000 ரூபாயைக்கொண்டுபிறருக்குஅதிகவட்டிக்குக் கடன் கொடுத்து அதனால் மிகுந்த லாபத்தை அடைவார்கள். தவிர, நடைமுதல் கணக்கிலுள்ள தொகைகள் முன் எச்சரிக்கை கொடுக்காமல் எந்த சமயத்திலும் வாங்கலாமென்றாலும், நடைமுதல் கணக்குள்ள எல்லோரும் ஏககாலத்தில் ஜாடா தொகையையும் வாங்கும்படி ஒருபோதும் நேராது. ஆகையால் பாங்கர்கள் நடைமுதலிலுள்ள மொத்தத் தொகையில் ஒருபாகம் மாத்திரம் தினப்படி நடக்கும் வரவு செலவுகளுக்குக் கையிருப்பாய் வைத்துக்கொண்டிருந்தால் போதுமானது. மிகவும் சொல்ப வட்டிக்கு வாங்கின நடைமுதல் கணக்கிலிருக்கும் பெரும்பான்மையோருடைய பணத்தை வேண்டியவர்களுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுத்தால் பாங்கருக்கு எவ்வளவு லாபகரமாக விருப்பதென்பது மேற் சொன்னவாறு புலப்படும். ஆகையால் பாங்கர்களுக்கும் பாங்கு சம்பந்தம் வைத்திருக்கும் வியாபாரிகளுக்கும் முதலாளிகளுக்கும் நடைமுதல் கணக்கானது மிகவும் அத்தியாவசியமானது. இதைத்தவிர நடைமுதல் கணக்கின் வரவு செலவுகளிலிருந்து ஓர் வியாபாரியின் யோக்யதையை அறிந்து கொள்ளலாம்.

சீசன் டிபாசிட்டுகள்:- (Season Deposits.) ஒவ்வொரு வருஷத்திலும் வியாபாரிகளுக்கும்மற்றுமுள்ள பொது ஜனங்களுக்கும் சில மாதங்களில் அதிக செலவு ஏற்படும். வியாபாரிகளுக்கு, அவரவர்கள் எந்தெந்த வியாபாரம் செய்கிறார்களோ அது சம்பந்தப்பட்ட சரக்குகளை மலிவான விலைக்கு மொத்தமாகச் சில குறிப்பிட்ட மாதங்களில் தான் வாங்கும்படி வரும். நெல் வியாபாரிக்கு மகசூல் அறுப்பான உடன் தான் தன் வியாபாரத்துக்கு வேண்டிய நெல்லை மொத்தமாக வாங்கிக்கொள்ள வேண்டும். பொது ஜனங்களுக்கு கிஸ்தி காலத்திலும் கலியாண காலத்திலும் செலவு அதிகமாக ஏற்படும். வியாபாரம் செய்யப்படுகிற ஒவ்வொரு சரக்கும் கிராக்கி ஏற்பட்ட நாட்களில் அதிகவிலையாகவும் கிராக்கியற்ற நாட்களில் குறைந்த விலையாகவும் விற்கும் என்ற விஷயம் எல்லோரும் அறிவார்கள். ஏனெனில் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றவாறு சரக்குகளுக்கு அதிக கிராக்கிஏற்படும் நாட்களில் அவற்றின் விலையை உயர்த்தினால் தான் வியாபாரிக்கு மிகுதியான லாபம் கிடைக்கும். அதே மாதிரி பாங்கர்களும் பணத்திற்கு அதிக கிராக்கி இருக்கும் சமயத்தில் தாங்கள் கொடுக்கும் கடன் தொகைகளுக்கு வட்டியை உயர்த்தி விடுவார்கள்.

(தொடரும்)



# *கூட்டுறவாளர்க்கேற்ற சில துறை.

(கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் ஊ. சா. வேங்கடராம ஐயர்.)

(112-ம் பக்கத் தொடர்ச்சி.)

டாகுமானால், அதனால் பிரிவினைச்சங்கங்கள் இதுவரையில் அடைந்துவந்த நன்மையினும் மேம்பட்ட நன்மையை எய்தமுடியும் என்பதில் ஏதும் ஐயமின்று. அக்கால், அதுவரையில் பிரிவினைச் சங்கங்களிற் சேராது விலகியிருந்தவர்களும் வந்து சேருவர். அதனால் முன்னையினும் அதிகமாக நமது இயக்கம் பரவும். பரவவே, இதுவரையில் நம்மிலும் தங்களைவேறாகக்கருதிவிலகிக் கொண்டிருந்த ஏனையோர் அனைவரும், ஏனைய சங்கங்களும், நமது இயக்கத்திற்குத்தீங்கு சூழ்ந்துகொண்டிருந்தவர்களும் தங்கள் தங்களது நன்மையைக்கருதியேனும் நம்மிடம் வந்துசேருவர். நமது இயக்கம் பகை, கொதுமல் இன்றி எவரையும் சேர்த்துக்கொண்டு அனைவர்க்கும் சம உரிமையை அளிக்கக்கூடிய கற்பகத்தருவுக்கு ஒப்பானது. ஆதலின் அன்னாருடைய புத்தி சக்திகளும் நமது இயக்கத்திற்குப் பயன்படும்.

இவையெல்லாம் "பேச்சளவில் மாத்திரம் இன்பமாய் இருப்பன; செய்கையிற்காட்ட முடியாதன" என்று சிலதன்னலப்பிரியர்கள் சொல்லக்கூடும். ஆனால், அன்னார்மேல் நாடுகளில் இம்முறை "எவ்வளவு விரைவில் இனிது பரவிப்பயனளித்துவருகின்றது" என்பதைக் கூர்ந்து கவனித்துத்தமது ஐயத்தையும், தம்மிடத்திலுள்ள குறைபாட்டையும் போக்கிக் கொள்ளக்கடவர். நமது இயக்கம் வலிவுறுதற்கு இன்றியமையா, தன அங்கத்தினர்களிடை ஒற்றுமையும், நம்பிக்கையும், உறுதியும், விட்டுக்கொடுக்கும் குணமும், பொறுமையும் என்பனபோன்ற சில நற்குணங்களே.

இந்த ஏற்பட்டால் பெரிய சங்கங்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் சிறிய சங்கங்களுக்கும் கிடைக்கத்தக்க வசதி உண்டாகின்றது. எங்கே எங்கே எந்த எந்த உயர்ந்தபண்டங்கள் விளைகின்றனவோ அங்கே அங்கேபோய் அந்த அந்த உயரியபண்டங்களை மொத்தமாகவாங்கிவரத்தக்க வசதியையும் செய்துகொள்ளலாம். எவ்வளவுக்கெவ்வளவு விளையும் இடங்களில் மொத்தமாக முன்பணம் கொடுத்துப் பண்டங்கள் கொள்வினை செய்யப் படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு செலவுக்குறைவும், பொருளின் மிகுதியும் உண்டாகும் என்பது அனைவரும் அறிந்ததொன்றே. நமது இயக்கத்தின் மூலாதாரக்கொள்கைகளுள் ஒன்றாகிய 'உண்டுபண்ணுவோருக்கும், வாங்குவோருக்குமே விளையும்பண்டங்களின் விலையாகக் கொடுக்கப்படும் பொருள்கள் சேரவேண்டும்' என்பதும் பூர்த்தியாகின்றது. இம்முறையால் நம்மவர்க்குத் தேவையான பண்டங்களுக்கே முதலிடம் கிடைக்கும் என்பதும், வேண்டாப் பண்டங்களால் வரும் பொருள்நஷ்டம் முதலியன வரவே மாட்டா என்பதும் கவனிக்கத்தக்கன.

## மத்திய சங்கம்.

இங்ஙனம் தங்களுக்கு வேண்டிய உண்டி, உடை, உறையுள் ஆதிய பல வசதிகளைத் தாங்களே தேடிக்கொள்ள முயலும் கூட்டுறவாளர் அவற்றை இனிது நிர்வகிப்பதற்குத்தக்க முன் ஏற்பாட்டையும் செய்துகொள்ளல் வேண்டும். அதற்கு ஒவ்வொரு மூலாதாரச் சங்கங்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு நடத்தப்படும் மத்தியசங்கங்கள் தோன்றுதல்வேண்டும். இவை குறிப்பிட்ட ஓரளவு தொகைக்கு மேற்பட்ட பொருள்களைத் தம்மிடம் வைத்துக்கொண்டு மூலாதாரச் சங்கங்களுக்குத் தேவையான காலங்களில் உதவிவரத்தக்க நிலைமையில் இருத்தல்வேண்டும். நமது நாட்டில் இம்முறையில் மாறி மத்திய சங்கங்கள் தோன்றியபின்னரே மூலாதாரச் சங்கங்கள் தோற்றுவிக்கப்படுகின்றன என்பதை அடியேன் அறிவேன். எனினும், அவை காலக்கிரமத்தில் தனிப்பட்டவர்களது ஆதிக்கத்தினின்றும் விடுபட்டு மூலாதாரச் சங்கங்களின் ஆதிக்கத்துக்கு வரவேண்டும் என்பதே அடியேனது வேண்டுகோள்.

தற்காலம் அம்முறை தவறியிருப்பதனால் தான் 'மத்திய சங்கத்தார் தங்களதுவேலை மூலாதாரச் சங்கங்களுக்குக் கடன்கொடுப்பதொன்றே என்று கருதுகிறவர்போலக் காணப்படுகின்றனர்.

இங்கே, முதலாளிகளின் வாடைவீசுவது உய்த்துணரத்தக்கது. அன்றியும், எந்தத் தொல்லையினின்றும் நீங்க உலகினர் முயலவேண்டுமோ, அந்தத் தொல்லையிலேயே விலக முயலுவதாகச் சொல்லிக்கொண்டே—வலுவில் நுழைந்துகொள்வதாகவும் இது முடிகின்றது. இது கூட்டுறவு முறையின் தத்துவத்திற்கு முற்றும் முரணானது என்பதை அடியேன் அதிகம் வற்புறுத்திக்கூற வேண்டியதில்லை.

மேற்பார்வை பார்த்தல்.

இனி, மத்திய சங்கத்தார், இவ்வளவோடு நின்றுவிடுதல் கூடாது. தங்களை நன்னிலையில் வைத்துக்கொள்ளப் பெரிதும் முயலல்வேண்டும். அதற்கு அன்னார் செய்யவேண்டியன தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட மூலாதாரச் சங்கங்களை மேன்பார்வை பார்த்தலே. இப்படிச்சொன்னதும் அதற்குத்தான் 'சூபர்வைஸிங் யூனியன்' என்ற பெயருடன் மேன்பார்வைச் சங்கங்கள் தோன்றியிருக்கின்றன என்று கூற முன்வரல் கூடும். ஆனால் அவையும் தவறானமுறைமையில் நடைபெறுகின்றன என்பதுதான் அடியேனது கருத்து. இப்பொழுது அந்த யூனியன்களுக்கு ஏதும் அதிகாரம் இல்லை. முன்பின் ஆராயாது மத்திய சங்கங்களாற் கொடுக்கப்பட்ட பலவிதக் கடன்களையும் வசூல்செய்யவே அவை பெரிதும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

இம்முறையில் மத்தியசங்கங்களின் வேலைகளைச் செய்கின்ற அவற்றிற்கு அம்மத்தியசங்கத்தார் குந்தியிருக்கக்கூட இடந்தந் துதவிபுரிகிறார்கள் இல்லை. அவை தங்கள் தங்களது முதுகிலேயே தங்களதுகுச்சைக் கட்டிக்கொள்ளவேண்டிய நிலைமையில் விடப்பட்டுள்ளன. இது 'தேனெடுப்பவன் ஒருவன்; குடிப்பவன் பிறிதொருவன்' என்ற வசனத்திற்கு ஒத்ததாயிருக்கிறது.

நிற்க, "பொதுஜனங்களுக்குக் கூட்டுறவு முறையின் தத்துவங்களை விரித்துரைத்துச் சங்கங்களை நிலையிடுவதும், நிலையிட்ட சங்கத்தினர்க்கு கணக்கு முதலியவற்றைத் தாங்களே வைத்துக்கொள்ளத்தக்க தகுதியை உண்டுபண்ணுவதும், அவற்றைத் தத்துவத்தினின்றும் தவறாது நடந்துகொள்ளுமாறு அடிக்கடி திருத்திவருவதும் தங்களது கடமை" என்பதை அவை முற்றும் மறந்துநிற்கின்றன. அவசியமானால் தாங்களே அந்தக் கணக்குகளை எழுதிக்கொடுக்க முயலும் இக்கூட்டத்தார், சம்பந்தப்பட்ட ஒவ்வொருவருக்கும் அவற்றைத் தாங்களே வைத்துக்கொள்ளத் தகுதியை உண்டுபண்ணுவது மேலானது என்பதை உணரலாகாதா? ஆகவே, தற்கால முறை மாறிக் கூட்டுறவுமுறையின் தத்துவங்களையும், கணக்குவைக்குமுறைமைகளையும் நன்கு அறிந்தவர்களை மாதச்சம்பளம் கொடுத்து உத்தியோகத்தில் அமர்த்தி அவர்களைக்கொண்டு மேற்கூறியாங்குப் போதிய பிரசாரஞ்செய்து மேன்பார்வை பார்ப்பதுதான் நமது இயக்கம் தகுந்த அஸ்திபாரத்துடன் நிலைத்து உரம்பெறத் துணைபுரிவதாம் என்பது ஒருசிறிது விளங்கும்.

விளைநில; மாக்கல்,

இம்முறையே நமது இயக்கம் வளர வளர அக்கால் ஒவ்வொருசங்கத்திற்கும் 'தானே தனக்குதவிசெய்து கொள்வதுதான் மேலானது' என்பதில் உறுதி அதிகமாகும். அதன் பயனாகத் தங்களுக்கு வேண்டிய பண்டங்களை விளைவித்துக் கொள்ளத்தக்க விளை நிலங்களைத் தேடிக்கொள்ளும் உணர்ச்சி உண்டாவதும் இயல்பே. இம்முறையில் அமைக்கப்படும் விளை நிலங்கள் ஒருவருக்கென தனித்துச்சொந்தமாக அமையா; சங்கத்தின் சொந்தமாகவே அமையும். ஆதலின், அவை 'எனது; உனது' என்ற சிறப்புரிமைகளில் நீங்கி 'நமது' என்ற பொதுத்தன்மையாற் சிறப்பிக்கப்படுகின்றன. இயக்கத்திற் சேர்ந்தவர்களாலேயே அவைபண்படுமாதலின், அவற்றில் வேலைசெய்கின்றவர்களுக்கும் 'பிறர் நிலத்திலே, பிறரது விசேஷலாபத்திற்காகக்கஷ்டப்பட்டுக்கூலியின்பொருட்டு நாம் வேலைசெய்கின்றோம்' என்ற எண்ணம் எழாது. 'நமக்காக நமது நிலத்தில் நாம் வேலைசெய்கின்றோம்' என்ற மகிழ்ச்சியே உண்டாகும். அந்நிலையில் அவரே முதலாளி



யாகவும், அவரே தொழிலாளியாகவும் ஆகின்றனர் என்பதும் ஆராயத்தக்கது.

இந்நிலைமை உறுதிபுறின் அழிவு, காவல், காப்பான் முதலிய நம்பிக்கையைக் குறைக்கும் செயல்களுக்கு இடம் உண்டாகமாட்டாது. அந்தச்செயல்களுக்குச் செலவிடவேண்டிய காலங்களில் ஒவ்வொருவர்க்கும தங்கள் தங்களது அறிவு வளர்ச்சிக்கும், பிற நன்மைக்கும் சாதனமான துறைகளில் முயலவும் இடம் ஏற்படும். அன்றியும், இங்ஙனம் 'தங்கள் தங்களது நிலங்களில் விளைவிக்கப்படும் பொருள்களை தங்கள் தங்களது உணவுக்கு உபயோகப்படுகின்றன' என்ற நிலைமை ஏற்படின் உலகிலே போட்டி, இலாபம், நஷ்டம், கடன், முதல், வட்டி என்ற சொல்லைகளெல்லாம் நீங்கிவிடும். பலதுறைகளிலும் இத்தகைய உயரிய நிலைமையை ராஸ்டேல் நியாய வழிகாட்டிகள் அடைந்துவருகின்றனர் என்று கேட்கப்படுவதும் கண்டு ஆராய்ந்தறியத்தக்கது.

வித்தை பயிற்றல்

இனி, இவை அனைத்தும் இனிது நிறைவேறுதற்கு இத்துறையிற் பழக்கமும், இதன் வரலாறுபற்றிய அறிவும் வாய்ந்த பலர் உழைப்பாளர்களாக முன்வரல் வேண்டும். அத்தகைய பழக்கமும், அறிவும், வித்தைபயிலும் மாணவப் பருவத்திலேயே வாய்ப்பது தான் சிறந்ததொன்றாகும். அவை வாய்ப்பதற்குக் கலாசாலைகளிற் படிக்கும் மாணவர்களுக்கு 'மாணவர் கூட்டுறவுச் சங்கம்' என்ற சங்கங்களை நிலையிட்டுப் பழக்கிவரல் வேண்டும். வகுப்புக்களில் வேற்று நாடுகளிலும், நமது நாட்டிலும் நடைபெறும் கூட்டுறவு வரலாறுகளைப்பற்றிய புத்தகங்களைப் பாடமாகவைத்து அம்முறையின் தத்துவங்களையும் பயன்களையும் விளக்கிப் போதித்து வரல் வேண்டும். 'இளமையிற்கல்வி சிலையில் எழுத்து' என்பது பெரியோர் வாக்கு.

அங்ஙனமாயின், அன்னார் தாங்கள் கலாசாலைகளிற் கற்றுப்பழகி இன்புற்றதை நினைந்து நினைந்து வயது வந்த பிறர்க்கும், நாட்டினர்க்கும் உரைத்து நமது இயக்கத்தைப் போற்றி வளர்த்தற்குப் பேருதவிசெய்யக் கூடியவராவார். இத்தகைய ஆற்றல்சான்ற மாணவர்கள் பலர் தோன்றும் நாளே நன்னாளாகும். இங்கே, உலகம் வேண்டுவது இஃதென்றறிவிக்கும்.

"அறிவும் ஒழுக்கமும் அன்றே; யார்க்கும்
அன்னம் முதலாத் துன்னிய பலவும்
கொடுத்துதவுவதாம் கொள்கையும் அன்றே;
அதிகாரிகள்புன் முயலலும் அன்றே;
எதனையும் அழியாதெழுதும் சீரிய
கைவன் மையும் அன்றே; மெய்யோடு
உண்மையாய் உழைத்தலில் உள்ளம்
தளரா தமை ஆண் தன்மைசேர் மக்களே."

என்ற பாடற்பகுதிகளும் ஆராயத்தக்கன.

விரித்துரையாடல்

இங்ஙனம், ஒருகூட்டத்தார் விசேஷஅறிவு, ஆற்றல்களைப் படைத்தனராயின் அன்னார்தம்முடைய புத்திசக்திகளைப் பலருக்கும் விரித்துரைத்து இந்தப்பரிசுத்தமான இயக்கத்தில் அனைவரையும்வந்து கலந்து இன்புறுமாறு போதியபிரசாரவேலையைச்செய்தல் வேண்டும். 'எத்தகைய பிரசாரவேலையும் முதலில் கிராமவாசிகளுக்கும், பெண்பாலர்களுக்கும் செய்யவேண்டியது தான் முக்கியமானது; அதுதான் காரியசித்திக்கும் ஏற்றது' என்று கூறப்படுவதும், அதற்கு மேற்கோளாகவரும்

'தொண்டர்காள் தேசத் தொண்டர்காள் நீவிர்
தேசதன் மைக்கெனச் செயும்முறை யீட்டைப்
பட்டண வாசக் கெட்டபேய்க் கொதுங்கி
மறுவிலாக் கிராம வாழ்க்கைப் பெருமையே
கொண்டு நன் கியற்றுங் குணங்கெடா வுழைச்
சோதரி யிடத்தும் சுத்தம் தவறாச்
சோதரி மார்க்கும் செய்வதே காரிய
சித்திக் கிசைந்ததாம் அதனை
நத்திச் செய்வீர் நன்மது வாமே."

என்ற செய்யுளும் இங்கே கவனிக்கத்தக்கன.

உலகோருங்கமைத்தல்.

இங்ஙனம், இம்மேலான முறையின் தத்துவங்கள் இயன்ற அளவு ஒருமுகமாய் ஒவ்வொருவராலும் ஆங்காங்குவிரித்துரைக்கப்படின் அதன் பயனாக உலகினர் எல்லோரும் கூட்டுறவினராக ஆதல் கூடும் என்பது ஒருதலை. "நிறைந்தபொருள் இருப்பதிலும் உதவிசெய்யக்கூடிய மனிதர் பலர் செறிந்திருப்பது மிகமேலானது" என்பதை ஒவ்வொருவரும் பற்பல சமயங்களில் அனுபவத்தில் உணர்ந்தே இருப்பர். அவசியமான காலங்களில் மாத்திரம் சூழ்ந்துள்ள மாந்தர்களுடைய உதவிகளை எப்படியேனும் பெற்றுக் கொள்ள விருப்பங்கொண்டு முயலுவோன், அத்தகையானை ஏனையசமயங்களில் மறப்பது படிற்றொழுக்

கமாம் நமது இயக்கமோ மக்களது ஒருமனப்பட்டகூட்டுறவையே தனக்குரிய அடிப்படையாகக்கொண்டதாய செயன்முறையாம்.

இனி, ஆங்காங்குள்ள கூட்டுறவாளர் ஒன்று சேர்ந்து, தங்கள் தங்களுக்கு வேண்டியவற்றைச செய்துகொள்வதுடன், தங்களைப்போலவே முயலும் வேற்றிடங்களிலுள்ள கூட்டுறவாளர்களுடனும் கலந்து வாழமுயலுவதுதான் 'உலகொருங்கமைதல்' என்று கூறப்படுவது. இப்படியே அனைவரும் கூட்டுறவாளராகி, அனைத்துச்செயல்முறைகளையும் கூட்டுறவுமுறையின் தத்துவப்படியே நின்று கூட்டுறவுகொண்டே நடத்திவருவார்களாயின் அவர்களாற் செய்து கொள்ளமுடியாத செயல்களும், அடையமுடியாத நன்மைகளும் கடவுட்படைப்பில் இல்லை என்றே கூறலாம். "முயன்றால் முடியாததொன்றில்லை"; "சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை"; "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"; "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே—அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்பன முன்னோர்மொழி.

முடிவுரை.

பெரியோர்களே, இத்துணையும் கூறியவாற்றால் உலகினர் இனிது உயிர்வாழ்வதற்கு இன்றியமையாதன உண்டி, உடை, உறையுள் என்பனவே என்பதும்; அவற்றை அடைவதற்குத் தடையாயிருப்பன பொதுஜனங்களிடத்திலுள்ள வறுமைநிலைமை, சிக்கனமின்மை, கடன் தொல்லை, வட்டிக்கொடுமை, போட்டிப்பெருக்கம், இடைக்கொள்ளை முதலிய பலவாம் என்பதும்; பொது ஜனங்கள் அவற்றினின்றும் நீங்கி, விடுதலை பெற வேண்டுமாயின், பண்டப்பிரிவினைமுதல் உலகொருங்கமைத்தல் ஈறாக இக்கூறப்பட—சிறிதுமுன் பின்னாக—பலதுறைகளிலும் கூட்டுறவு இயக்கம் பரவல்வேண்டும் என்பதும்; அவை தோன்றுவதற்கு இன்றியமையாதது இம்முறையின் தத்துவங்களை இனிதுணர்ந்த பிரசாரகர்களது பேருழியமே என்பதும்; அத்தகையினர் பலர் உண்டாவதற்கு நமது பிற்காலச் செல்வங்களாகிய—இருமபுத்துண்களாகிய சிறுவர்கள் கற்குங்காலத்திலேயே இனிது படிப்பிக்கப்படவேண்டும் என்பதும்; அங்ஙனம் கற்றுத்தேர்ந்த மாணவர்கள் தாங்கற்றவற்றை நாடு நகரம்முதலிய பல இடங்களிலும்—முக்கியமாய்க் கிராமங்களிலும் ஆண் பெண்என்ற இருபாலர்க்கும் பயன்படுமாறு இனிதுபரத்த முயலவேண்டும் என்பதும்; இங்ஙனம்நிறைவேற்றப்படின் அதனால் உலகினர் அனைவரும் கூட்டுறவாளர் என்ற உயரிய நிலைமையைப்பெற்று எண்ணிய எண்ணியாங்கு எய்தற்குத்தக்க ஏற்றமான நிலைமையினைப் பெறுவர் என்பதும்; பிறவும் ஒரு சிறிது புலனும்.

பெரியோர்களே, உலகநிலைபேற்றிற்கு மூன்றுவகைப்பட்ட மனிதர்கள்வேண்டும். ஒருசாரர் தம்மாற் செய்யக்கூடியவற்றை உண்மையாகவும், உறுதியாகவுஞ் செய்துகொண்டு மக்களாவர் அடையவேண்டியதெனத் தம்மால் நம்பப்பட்ட நல்லதொருபெருநோக்கத்தையே இடைவிடாமல் வற்புறுத்திவருபவர். மற்றொருசாரர் இயன்ற அளவு செய்வதிற் பின்வாங்காது ஊக்கத்துடன் உழைப்பவர். பிறிதொருசாரார் இவ்விருதிறத்தினருக்கும் துணைபோபவர். அடியேன் அவற்றுள் முதல் வகுப்பிற் சேர்ந்துழைக்க முயல, விரும்புகின்றவன் ஆதலினால் அடியேன் கூறுவன முற்றும் நிறைவேற்றமுடியாதனவாயிருக்கின்றன' என்று அஞ்சாதீர்கள். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்றும், "அறிவறிந்து ஆள்வினை யின்மைபழி" என்றும்பெரியோர்கள்மொழியாநிற்பர்.

ஆகவே, மகாபரிசுத்தமான கூட்டுறவுக்கொடியின் கீழ்த்தங்கி இன்புற முயலும் நாம் நம்முன் காணப்படும அனைத்துக்கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் சேர்ந்துழைத்தல் வேண்டும். சேராதவர்களையும் சேர்ந்தின்புறுமாறு தூண்டுதல்வேண்டும். ஒற்றுமையால்வரும் பெரும்பயனை நாமும் நுகர்ந்து உலகினரையும் நுகருவித்தல்வேண்டும்.

பெரியோர்களே, அடியேனுடைய புன்சொற்களைக்கூறி இனியும் உங்களது மேலான காலத்தை வீண்போக்க அடியேன்விரும்பவில்லை. அவ்வளவுதூரம் அடியேனுடைய புன்சொற்களுக்குச் செவிசாய்த்துக் கேட்டமைக்கு உங்கள் அனைவருக்கும் வந்தனம்.

சபையோர்களே, இனிக்கடைசியாக அடியேன்,

"காகம் உறவு கலந்துண்ணக்
கண்டீர் அகண்டா கார சம
போகம் எனும் கூட்டுறவு வெள்ளம்
பொங்கித் ததும்பப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குதந்தோ
இன்புற்றிட நாம் இனியெடுத்த
தேகம விழுமுன் புசிப்ப தற்குச்
சேர வாரும் செகத்தீரே."

என்று நமது தாயுமானப்பெருமான் அடிகளது திருவாக்கில் சில சொற்களை மாற்றி உங்களனைவரையும் இந்த உலக விடுதலைக்கு ஆதாரமான பரிசுத்த இயக்கத்திற் கலந்துழைக்குமாறு விரும்பிக் கூவி அழைத்து அடியேனது கடமையைப் பூர்த்திசெய்துகொள்கிறேன். சுபம்.



223464

# ஜீவகாருண்யம்.

(ஸ்ரீமான் N. R. சுப்பிரமணியஐயர், நாகபட்டணம்.)

கும்பகோணத்தில் சென்ற சில வாரங்களுக்குமுன் "ஜீவகாருண்ய சங்கம்" ஒன்று ஸ்தாபித்திருப்பதாய்ப் பத்திரிகையில் படித்தேன். தற்காலம் அச்சங்கம் நம் நாட்டிற்கு அத்தியாவசியமாய் வேண்டியதுதான். ஜீவகாருண்யம், தருமம், புண்ணியம், என்பவைகள் மேநாட்டு நாகரிகத்தால் விழுங்கப்பட்டுப் போனதினிமித்தம், நம் நாட்டில் அகாலமரணம், , சிசுமரணம், வறுமை, பிணி முதலியவைகளால் பீடிக்கப்பட்டு பலவித துன்பத்திற்கும் ஆளாகிக்கொண்டே வருகிறோம் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல விளங்குகிறது. ஆனால் நம் நாட்டில் பல சங்கங்கள் தோன்றுவதும் ஆரம்பத்தில் சூரர்கள்போல விளங்குவதும் பின்பு அவைகள் இருந்த இடந் தெரியாமல் மறைவதும்வழக்கமாகிக்கொண்டிருக்கிறது. அதின் காரணம் என்ன வென்றாலோ சில சுயநலப்பிரியர்களாலும், பொது ஜனங்களின் ஆதரவுக் குறைவாலும் அவ்விதம் ஏற்படுகிறதேயல்லாமல் வேறல்ல. ஆனால் இச்சங்கத்தினால் பெருகு ஜனங்கள் நல்ல வழியில் யீடுபட்டு இகத்திலும் பரத்திலும் மோக்ஷ சாம்பிராஜ்ஜியத்தையடையவும், அநேக ஜீவப்பிராணிகளின் வதை நீங்கவும், சிசுமரணம், அகால மரணம், வறுமை, பிணி முதலியவைகள் நீங்கி சுகஜீவிகளாக வாழ்ந்துவரவும் மார்க்கம் உண்டாகும் என்பதில் சற்றும்சந்தேகமேஇல்லை. ஆனதால் பொதுஜனங்கள் இச்சங்கத்தை ஆதரித்து மென்மேலும் பெருகச் செய்து ஒவ்வொரு பட்டணங்களிலும், கிராமங்களிலும், கிளைச்சங்கமாகவோ, தனிச்சங்கமாகவோ ஏற்படுத்தி விருத்தி செய்ய ஒவ்வொருவரும் முற்படவேண்டியது அவசியம் என்பதைக்குறிப்பிடுவதோடு, "ஜீவகாருண்யம்" என்பதைப்பற்றி என் சிற்றறிவுக்கு எட்டிய வரையில் நம்கிராமநுகூலன் வாயிலாய் எழுதத்துணிந்தேன்.

தமிழ் வேதம் எனும் திருக்குறளில்:—

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்கதான்பிறி,
தின்னுயிர் நீக்கும் வினை"

என்று திருவாய்மலர்ந்தருளினர் திருவள்ளுவ நாயனர். அதாவது உன் உயிர்போகும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டபோதிலும் வேறோருயிரைக் கொல்லும்படியான தொழிலை நீ செய்யாதே என்பதை நாம் அறிகிறோம். உள்ளத்தில் ஒன்றும் வாக்கில் ஒன்றும் செய்கையில் ஒன்றுமாக பிரமித்துத் திரிகின்ற தற்கால சீர்திருத்தக்காரர்களையும், தலைவர்களையும் போலல்ல. இவர் மகாத்மா காந்தியடிகளைப்போலவே தம் நாவால் சொல்லியதைச் செய்கையில் செய்து காட்டிய புண்ணிய சீலர். இவர் அனுபவ ஞானியாக இருந்தபடியால்த்தான் இவருடைய அனுபவ ஞானக்கருத்துக்கள் அடங்கிய "குறள்" தோன்றிய நாள் முதல் உயர்ந்து சிறந்து தமிழ்வேதமென எல்லோராலும் கொண்டாடப்படுகிறது. எவ்வுயிரையும் தன்னுயிரெனக் கருதி, கொல்லாமை என்னும்விரதத்தைத்துணையாகக்கொண்டு இவர் எவ்வுயிர்க்கும் இம்சை இல்லாத நெசவுத் தொழிலை கடைப்பிடித்து அதனாலேயே குடும்பத்தை நடத்திவந்தார். இவர் தமது நெசவுத்தொழிலினாலே எப்படி மனிதனுடைய தேகத்தைச் சுற்றிக் கட்டுவதற்குக் குறுக்கு நெடுக்காக நூல்களை இணைத்து அழகிய வஸ்திரங்களைக் கொடுத்துதவியதுபோல, தமது அனுபவ சம்பிரத்தினால் பலவித மேம்பட்டான கொள்கைகளையும் சேர்த்து இணைத்து "குறள்" என்னும் ஆடையை நெய்து கொடுத்து மானிடவர்க்கத்திற்கு அலங்காரமான உடையை யளித்தார். இந்த ஆடையினால் அலங்கரிக்கப்பட்டவர்களுக்கு எங்கும் எவ்விதச் செல்வர்க்கும் உண்டு. எவ்விடத்திலும் தடை இல்லா

மல் செல்லலாம். இவர்களுடைய வாக்கியங்கள் எல்லோராலும் போற்றப்படும்.

கொல்லாமையையே விருதமாகப் பூண்ட சிபிச்சக்கிரவர்த்தியானவர் ஒருபுறாவைக்காப்பாற்றும் பொருட்டு தனது தொடையிலிருந்து சதையை அறுத்துக்கொடுத்தார் என நம் புராணங்களில் எழுதப்பட்டிருக்கிறது. நம் ஜன்ம பூமியாகிய இப்புண்ணிய நாட்டில் ஜீவஹிம்சையானது சண்டாளத்துவம் என சொல்லப்படுகிறது. ஜீவஹிம்சை, ஜீவவதை, செய்வதினாலேயே பறையர், பள்ளர், சண்டாளர் என சொல்லப்படும் ஜாதியார் தாழ்ந்த வகுப்பினராய் கருதப்பட்டார்கள். ஆதி நாள் முதல் இந்நாட்டில் அவதரித்த புண்ணிய புருஷர் யாவர்களும், ஜீவவதை, ஜீவஹிம்சைகள் செய்யலாகாதென்று கண்டித்தே போதித் திருக்கிறார்கள். ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ மாத்வர் முதலியவர்கள் ஜீவஹிம்சையை செய்யலாம்என்று எங்கேயாவது சொல்லி இருக்கிறார்களா? என்று பார்த்தால் அவ்விதம் காணப்படவில்லையே? ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகள் "கொல்லா விருதங் குவலயமெல்லாமோங்க வெல்லார்க்கும் சொல்லுவதென்னிச்சை பராபரமே" என்று சொல்லியிருக்கிறார். ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிகளும் "யாதொன்றுங் கொல்லார்க் கின்பங்கொடுப்பதாய்" என்று ஈசனுடைய லெட்சணத்தை வர்ணித்திருக்கிறார். இன்னும் "கொல்லா விரதமது கொள்ளாரைக் காணிலொரு புல்லாக வெண்ணிப் புறம்பொழிக" என்றார். அவைகளைக் கொல்வது ஒருபுறமிருக்க அவைகளுக்கு ஏதேனும் ஆபத்து வருங்காலத்தில் அதை நிவர்த்திக்க கடவுளால் அளிக்கப்பட்ட கொம்புகளை சூட்டுக்கோல் கொண்டு பழுக்கப் பழுக்க தீக்கிறார்கள். அச்சமயம் அவைகளின் உயிர் எவ்விதம் துடிக்கும்என்பதை இங்கு குறிப்பிடவும் வேண்டுமோ? அந்தோ பரிதாபம்! அந்த சிட்சையுடன் நிறுத்துகிறார்களா? கொசு, ஈக்கள் முதலியவைகளின் உபத்திரவத்தை நீக்கிக்கொள்ளும்படி ஆண்டவன் அளித்த காதுகளையும் செத்தம் சொட்டச்சொட்ட ஒட்ட அறுத்துவிடுகிறார்கள். போராக்குறைக்கு விதைகளையும் நன்றாய் கிட்டிகட்டி காயடித்து விடுகிறார்கள். தற்காலத்தில் ஆட்டுக்கிடாய்களுக்கும் காயடித்துவிடுகிறார்கள். நாய்களுக்கும் வாலை ஒட்ட வெட்டிவிடுகிறார்கள். சிலர் காளைகளுக்கும் கிடாய்களுக்கும் காயடித்தால் அவைகள் நன்றாய்க் கொழுத்து கூடுதலான விலைக்கு விற்கும் என்று மனம் கூசாமல் சொல்லுகிறார்கள். இவைகளால்தான் நம் நாட்டில் கால் நடை விருத்தி வரவர குறைந்து கொண்டேவருகிறது. இப்படி ஜீவவதையும் ஜீவஹிம்சையும் செய்யப்படுவதை நினைக்க நினைக்க மனம் திடுக்கிடுகிறது, அந்தோ! பரிதாபம!! கடவுள் மனிதர்களை எவ்விதம் படைத்தாரோ, அதுபோலவே மற்ற ஜீவன்களையும் படைத்தார் என்பதை உணரவேண்டாமா? மனிதர்களைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு அவைகளினால் ஜன சமூகத்திற்கு சௌகரியங்களிருக்கிறதே? அவைகளைக் கொன்று தின்று சரீரத்தைக் கொழுக்கச் செய்யவா ஆண்டவன் படைத்தார். அல்லவே அல்ல. அஞ்ஞானமல்லவா எளிய ஜீவராசிகளின் இரத்தத்தைஉறிஞ்சும்படி செய்கிறது? மமதையாலல்லவா எண்ணிக்கையற்ற பிராணிகள் வதைக்கப்படுகின்றன? உங்களுடைய உடலைப் போலவே அவைகளின் உடல்களும் மாம்சத்தால் ஆக்கப்பெற்றவைதானே? மாம்சத்தைத் தின்று மாம்சத்தை பெருக்குகின்ற உங்கள் உடலில் எங்கேயாவது ஒரு புண் உண்டானால் அது எவ்வளவு அருவருப்பும், அசிங்கமும் ஏற்படுகிறது. சாதுக்களான ஆடுமாடு முதலியவைதானா உங்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டன? அடங்கி அமர்ந்து கிடக்கும் பிராணிகளைக்கொன்று தின்பதில் பெருமையுண்டோ? யோசித்துப்பாருங்கள். மாம்சம் தின்பதில் ஸ்தூல பலம் அதிகரிக்கின்றது என்பது வீண் பேச்சு அவைகளினால் குரூர புத்தியும் குரூர செய்கைகளும்தான் அதிகமாகும் என்பதில் தடையே இல்லை ஆங்கிலேய நாட்டிலும் மாம்சம் உண்பதில் பிரயோஜனமில்லை என்று அநேக டாக்டர்கள் கண்டுபிடித்து ஆங்காங்கு பிரசாரம் செய்துவருகிறார்கள் என்று சமாச்சாரப் பத்திரிகைகளில் காணப்படுகிறது.



# ராணா பிரதாபசிம்மன்.

அல்லது

## "ரஜபுத்திர தேசபக்தி."

(ஸ்ரீமான் மகாலிங்க சர்மா சிறைவாசத்தில் எழுதியது.)

(All Rights Reserved)

———(0)———

*அவனுடைய இணைவிழிகள் அம்பிகையின் கருணாரசம் பொழியும் முக சரோருகத்திலிருந்து சிறிதும் பிரிய மனமில்லாது இமையா நாட்டமாயின. முகமோ ஜகன்மாதாவாகிய அம்மணியைக் கண்ட சந்தோஷத்தினால் சிவந்து பொலிவுடன் விளங்கியது. உடல் முழுவதும் பக்தியின் மேலீட்டினாலும் உணர்ச்சியின் அதிகத்தினாலும் வெயர்வை சொரிய ஆரம்பித்தது. நெஞ்சமும், மார்பும், படபடவெனத் துடிக்க ஆரம்பித்தன.*

---

உலகில் உயிரில்லா வஸ்துக்கள் எவை? மரம் செடி முதலியவைகள் வளர்கின்றனவே? அவற்றில் உயிரில்லையா? என்று சிலர்கள் விதண்டாவாதக் கேள்விகள் கேட்கலாம். நமது நகங்களையும், ரோமங்களையும் எடுத்து எறியும்போது நமக்குத் துன்பம் உண்டாகின்றதா? ஆனால் நகங்களும் ரோமங்களும் வளர்கின்றனவன்றோ? அதுபோலவே மரங்களினின்றும், காய்களையும், கனிகளையும் பறித்துத்தின்பதால் அவற்றிற்கு எவ்வித துன்பமும் உண்டாகிறதில்லை என்று ஆன்றோர் கூறுகின்றனர். ஸ்ரீ தாயுமான ஸ்வாமிகளும்

"காயேனு வறிய செங்காயேனும் முதிர்சருகு
கந்த மூலங்களேனும்
கனல்வாதை வந்தெய்தினள்ளிப்புசித்து நான்
கண்மூடி மௌனியாகி" என்று பாடியிருக்கிறார்கள்.

நமது பாரத பூமியானது ஜீவகாருண்ணியத்தின் ஜன்மபூமி எல்லா வஸ்துக்களிலும் "உன்னையும் உன்னில் எல்லா வஸ்துக்களையும் பார்" என்ற இனிய உபதேசமானது இப்பூமியில்தான் உற்பத்தியாயிற்று. "இரண்டென்பதில்லை; எல்லாம் ஒன்றே" என்ற கம்பீர கோஷமானது இங்குதான் கிளம்பிற்று ஒரு சிறு ஆட்டுக்குட்டியை ரெட்சிக்கும்பொருட்டு தமதுஉயிரை பலிகொடுக்கத் துணிந்த புத்தர், அன்பே அவதாரமானது போல எழுந்தருளிய புத்தர், அன்பே இன்பம் எனும் அரிய கொள்கையை அவனியில் நிலைநாட்டிய புத்தர், பிறர் துன்பங்களை பார்க்க சகியாத பேரன்புவாய்ந்த புத்தர், நம் நாட்டில்தான் அவதரித்தார். ஆடுமாடுகளின் பரிதாபகரமான நிலையை நினைத்தல்லவோ சாக்ஷாத் பகவானும் அவற்றையே தாம் பெரிதாகக் கருதுவதாக உலகத்தார்கள் அறிந்துகொள்ளும்பொருட்டு ஆயர்பாடியில் ஸ்ரீ கிருஷ்ண பகவானும் தோன்றினார். உண்மையில் உயர்ந்த நூல்களுக்கு இடங்கொடுத்த சங்கப்பலகைபோல, திருவள்ளுவரை நம்புகிறவர்களுக்குத்தான் நம் தமிழ் உலகம் இடந்தரும். புத்தர் அவதாரபுருஷரென்று நம்புகிறவர்களுக்குத்தான் இப்புண்ணிய பூமி இடங்கொடுக்கிறது. ஆனதால் கொல்லாமை என்னும விரதத்தை கைக்கொள்வீர்களாக, திருக்குறளில் மற்றோரிடத்தில்

"கொல்லான் புலாலை மறுத்தானைக்,
கைகூப்பி, யெல்லாவுயிருந்தொழும்"

என்றார் வள்ளுவர் அதில் நாம் அறியக்கிடப்பதென்ன? ஒருயிரையும் துன்புறுத்தாதவன் சர்வ ஜீவதயாபரனவன்; அவனே ஈஸ்வரன்; அவனே புண்ணிய புருஷன்; ஜீவகோடிகள் எல்லாம் அவனையே சரணாகதி யடைகின்றன. அவனுடைய ஆக்ஞாச் சக்கரமே இப்பிரபஞ்சத்தில் ஆணை செலுத்துகிறது. ஜீவராசிகள் அனைத்தும் அவனது அடைக்கலம் எல்லாம் ஒன்றே என்னும் கொள்கை எங்கும் பரவ இரங்குவாய் என்று நம் எம்பெருமானை இறைஞ்சுகின்றோம்.

உதடுகள் பொதுவாக அசையத் தொடங்கின. தொண்டையும் கம்மியது. அடியற்ற மரம்போல் தன்னையும் அடக்கமுடியாதவனாகி அம்பிகையின் திருப்பாதங்களில் சாய்ந்தான். சில நிமிஷங்கள் வரையில் எழுந்திருக்கவாவது சற்றும் அசையவாவது இல்லை. சில நிமிஷங்கள் வரையில் தரையில் கிடந்தபடியே அம்பிகையை மனமாரத் துதித்து ஒருவாறு எழுந்திருந்தான். எழுந்து நின்று இரண்டு கரங்களையும் சிரமேலேற்றிக் கண்மூடி மெய்மறந்து அம்பிகையைப் பிரார்த்திக்கத் தொடங்கினான்.

மாணிக்ய வீணாமுபலாலயந் தீம்
மதாலஸாம் மஞ்சுலவாக் விலாஸாம்
மஹேந்திர நீலத்யுதி கோமளாங்கீம்
மாதங்க கன்யாம் மனஸாஸ்மராமி
சதுர்புஜே சந்திர கலாவதம்ஸே
குசோந்நதே குங்கும ராகசோணே
புண்ட்ரேக்ஷு பாசாங்குச புஷ்பபாண
ஹஸ்தே நமஸ்தே ஜகதேக மாத:

மாதா மரகதச்யாமா மாதங்கி மதுசாலிநீ
குர்யாத் கடாக்ஷம் கல்யாணி கதம்பவன வாஸிநீ
ஜயமாதங்கதநயே! ஜயநீலோத்பலத்யுதே!
ஜயஸங்கீதரஸிகே! ஜயலீலா சுகப்ரியே!

ஜயஜநநீ ஸுதாஸமுத்ராந்த ருத்யந் மணித்வீப ஸம்ரூடபில்வாட வீமத்ய கல்பத்ருமாகல்ப காதம்ப காந்தார வாஸப்ரியே க்ருத்திவாஸப்ரியே................. ஜகந் மாதிருகே! பாஹிமாம் பாஹிமாம் பாஹி!

அவனுடைய தீனஸ்வரத்துடன் ஸ்லோகத்தைச் சொல்லி முடிக்கும்போது கல்லும்கரைந்துஉருகும்படி இருந்தது.

ஹே! ஜகஜநநீ! உன்னுடைய அருமையான வாசஸ்தலமாக நீ தேடிக்கொண்ட இப்புண்ய நாட்டை மதவிரோதியான சத்துருக்கள், பலாத்காரமாகக்கவர்ந்து கொண்டனர். அம்மணி! அதனாலேதான் உன்னுடை முகம். சென்ற தடவை நான் பார்த்ததைவிட இன்னும் அதிகமான கோபக்குறியுள்ளதாக இருக்கிறதுபோலும், அன்னியர்களால் ஆக்ரமிக்கப்பட்ட இப்புண்ணியநாடு அழகிழந்து அவமானத்துடன் தலைகுனிந்து நிற்கின்றது. இவ்வுயர் நாட்டுக்கு ஏற்பட்ட துயரத்தை கருணாநிதியான உன்னுடைய அருட்பெருக்கினால், மீண்டும் உன்னத நிலையில் சேர்க்கவேண்டும். ரஜபுத்திரர்களின் உள்ளத்தில் என்றும் குடிகொண்டு எழுந்தருளியிருந்து, அவர்களுடைய துன்பங்களிலெல்லாம் துணையாய் நின்று காத்துவந்தபவானியாகிய நீயல்லதுவேறு யாரை யான் சரணமென்றடைவது? உன் முகத்தாமரையின் முன்னால் என் துயரங்கள் பஞ்செனப் பறக்கும். உன்னையன்றி யான் வேறு யாரை சரண்புகுவேன்! வாழையடி வாழையென வந்து, மீவார ராஜ்யத்தின் பட்டத்தை வகித்த அரசர்களெல்லோருக்கும், நீயே தாயாக நின்று உற்றவிடத்து உயிர் வழங்கி நின்றாய்! நின் தொண்டர்களாய்த் தோன்றிய அத்திருக்கூட்டத்தில், அதே ராஜகுலத்தின் மரபில் தோன்றிய வருள் யானும் ஒருவனல்லனோ? வகைதெரியாது ஏழையான் படும் துயரம் நின் திருவுளத்திற்கு சம்மதமோ!

"ஓயாது தேம்பிநான் அழுமழுகை நின தருமைச்
செவியினிற் கேட்கவில்லையோ!
சேயாகும் நானுனக்குத் தாயாகும் நீயெனக்குத்
தன்மையிது அறிவதில்லையோ!
பாயாத கருணையே மடைவெள்ள மெனதுபால்
திறப்பதற் குளமில்லையோ!
பேயாகுமன்னியரைத் துலைத்தோட்டியறம்நாட்ட
சுதந்திரநற்கோ லருள்வையே;

பேயினும் கொடியோராகிய அன்னியர்களைச் சக்திமயமான நின் அருட்கோலினால் வெருட்டி யான் ஓட்ட வேண்டும். நின்னைச்சரண மென்றடைந்தோர்க்கு ஆகாதகாரியமும் ஒன்றுண்டோ? மீவாரநாடு சுதந்தரமடைவதற்கு நீயே துணைபுரிய வேண்டும். உன் அருள்வலியைத் தாங்கி, உறுதியுடன் நின்று, தாய்நாட்டின் பொருட்டு என் உயிரையும் அர்ப்பணம் செய்ய உதவவேண்டும். உன்னுடைய கொடிய ஆயுதங்களால் சத்துருக்களை நீ த்வம்ஸம் செய்ய வேண்டும்.

உன்னிடத்தில் உள்ளன்புடன் பக்தி செய்தகாரணத்திற்காக உளமகிழ்ந்து, பரமகாதகனும் பாபஸ்வரூபியும் சூரபன்மாவினுடைய சகோதரனுமாகிய அக்னிமுகா சூரனென்பவன் உன்னை மனமாறத் தொழுது உதவிவேண்டி, முருகபிரானுடன் போர் செய்தகாலத்து, அவனுடைய பக்திக்குமெச்சி நீ அவன் காதகனென்பதறிந்தும், அவனுக்காக உன் துணைவிகளும் பல்வேறு சக்திகளுமாகிய, சண்டிகை, பத்திரை, நீலி, சாமளை முதலியவர்களுடன் சூலமும், தண்டும், வாளும், சுடர்மழுப்படையுஞ் சிற்றக்கோலமும் கொண்டு யுத்த காலத்தில் தோன்றிநின்று, "கொன்றுயிர் பலவும் நுங்கி குருதியும் வடிவுமாக்கி" என்றபடி ரத்தக் கோலத்துடனும், வீராவேசத்துடனும், அவ்வரக்கனுடைய படைகளை வெட்டிச்சாய்த்து வீரகோஷம் செய்தது நீயேயன்றோ! உன் அருள்என்னும் வெறியால் காப்பாற்றப் படுகின்ற கற்பகம் போன்ற இவ்வழகியநாட்டை அன்னியருடைய வலையினின்றும் விடுவிப்பதற்காகச் செய்யப்படும்தருமயுத்தத்தில் நின்கணங்கள் பலவற்றுடனும் தோன்றி பகைவர்களுடைய ரத்தத்தைப் பெருகச்செய்து, உன் மனதைக் களிப்பித்துக் கொண்டு எமக்கு ஜெயமளிக்க வேண்டும்!

(தொடரும்.)




## காயாரோகண வைத்தியசாலை, கும்பகோணம்.

(டாக்டர் V. P. சாமி அவர்களால் மிக்க திறமையுடன் நடத்தப் பெறுவது)

சித்தர்களுடைய உயர்ந்த வைத்திய முறைகளைப் பின்பற்றி பல நூற்றாண்டுகளாகக் கையாளப்படும் சிறந்த சுதேச வைத்தியசாலை. ஆராய்ச்சியும் அனுபவமும் கீர்த்தியும் வாய்ந்த அரியதோர் வைத்திய குடும்பத்தினரால் சிறப்புடன் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. ஏழைகளுக்குத் தருமவைத்தியம் செய்யப்படும். மாதந்தோறும் ஆயிரக்கணக்கானவர்கள் பிணி நீங்கி, வளமார வாழ்ந்திச்செல்கின்றனர். மலபந்தம் அஜீரணம், ஜுரம், காசம் முதலிய நோய்களுக்கும்; குஷ்டம், துன்மம் முதலிய மகாரோகங்களுக்கும் ஆச்சரியப்படும்படி மிக்க சுலபமாகச் சிகிச்சை செய்து நிவர்த்திக்கப்படும்.

குழந்தைகளுக்கு ஏற்படும் கட்டி, காயாலை முதலிய கொடிய வியாதிகளை நிவர்த்தி செய்வதில் நமது வைத்தியசாலை அழியாப்புகழ் பெற்றிருக்கின்றது. ஏழைகளுடையவும், பிணியாளிகளுடையவும் நன்மையையே கருதி நடத்தப்படும் உயர்ந்த சுதேச வைத்திய ஸ்தாபனம் இதுவே. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர், காயாரோகண வைத்தியசாலை,
காமாக்ஷி ஜோசியர் தெரு, கும்பகோணம்.



கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல்
பிரதம ஸம்ஸ்கிருத பண்டிதர்
ஆர். சிவராம சாஸ்திரிகளால்
பிரசுரிக்கப்பட்ட

## ஸம்ஸ்கிருதபுஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ ராமசரிதம் (ஸம்ஸ்கிருத வசனம்) | 0 | 7 | 0 |
| சாகுந்தலா சரிதம் ௸ | 0 | 4 | 0 |
| சாருதத்த சரிதம் ௸ கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மகா-ா-ஸ்ரீ சுவாமிநாதய்யர் அவர்களுடைய முன்னுரையுடன் கூடியது | 0 | 7 | 0 |
| சரித்ர ரத்னாவளி | 0 | 10 | 0 |
| தர்மகல்பவல்லி (முதல் பாகம்) | 1 | 8 | 0 |
| சுக்ல யஜுர்வேதம் | 4 | 0 | 0 |
| ஸ்ரீமத் பாகவதத் தமிழ் வசனம் | 12 | 0 | 0 |
| தர்மகல்பவல்லி (2-வது பாகம்) டிம்மி 2 பாரம் கொண்ட ஸஞ்சிகையாக மாதந்தோறும் வெளிவரும். வருஷ சந்தா | 2 | 0 | 0 |

பண்டிட் ஆர். சிவராம சாஸ்திரி,
தலைமை ஸம்ஸ்கிருத பண்டிதர்,
டவுன் ஹைஸ்கூல், கும்பகோணம்.



## சுதந்திரன்.

பிரதி பானுவாரந்தோறும் வெளிவரும்
ஓர் தமிழ்ப்பத்திரிகை.

சென்ற 7 வருஷகாலமாய் நம் நாட்டு முன்னேற்றத்திற்கு அடிப்படையான விவசாயம், கைத்தொழில் வியாபாரம் முதலிய செல்வவிருத்திக்கான விஷயங்களும், மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் அவசியமான சுகாதாரம், நோய் பரிகாரம், மதுவிலக்கு முதலிய வியாசங்களுடன் வெளிவந்து கொண்டிருந்த "வர்த்தகமித்திரன்" தற்காலப் போக்கை அனுசரித்து "சுதந்திரன்" என்னும் பெயருடன் 4 வருஷ காலமாக இராஜீய விஷயங்கள், மகாத்மா காந்தியவர்களின் உபதேசம், இந்தியா முன்னேற்ற மார்க்க விவரங்கள் முதலிய விஷயங்களுடன் வெளி வருகின்றது. சுயராஜ்யமடைய விரும்புவோர் யாவரும் இப்பத்திரிகையை வரவழைத்துப் படித்து சகோதர, சகோதரி யாவரும் சுயராஜ்யமடைந்து சுகஜீவிகளாகவேண்டும்.

வருஷசந்தா இந்தியாவிற்கு ரூ. 6—0—0.

சுதந்திரன் ஆபீஸ்,
தஞ்சாவூர்.

நம் சகோதரர்களே! வியாபாரிகளே!!
விளம்பரம்செய்வோர்களே!!!

# திராவிடன்

நம் தமிழ் நாட்டார்
முன்னேற்றத்திற்காகவே
வெளிவந்துலாவும்
தினசரிப் பத்திரிகை.

அரசர்முதல் சாமானிய விவசாயிவரை, செல்வவான் முதல் ஏழைவரை, சாதி, வகுப்பு பேதமின்றி யாவரும் வாசித்து வருவது நம் பத்திரிகையையே.

தமிழ்நாடு முழுவதும், தமிழ் நாட்டார் குடியேறியிருக்கும் வெளிநாடுகள்தோறும் பரவி வருகிறது.

விளம்பரம் செய்து வியாபாரத்தைப் பெருக்கிப் பணம் சம்பாதிக்க ஏற்ற பத்திரிகை இதுவே.

மானேஜர்:—
'திராவிடன்'
போஸ்டு பாக்ஸ் நெ 760,
எழும்பூர், மதருஸ்.

---

## "தெய்வ பக்தன்."

மாதம் இருமுறை வெளிவரும்
தமிழ்ப் பத்திரிகை.

தமிழ் நாட்டில் தேவஸ்தானம் முதலிய தர்ம ஸ்தாபனங்கள் இவற்றால் நம்மவர் அடையவேண்டிய நன்மைகளையும் அவற்றில் அவர்களுக்குள்ள சம்பந்தங்களையும், பிற அறிவு வளர்ச்சிக்கும், செல்வ விருத்திக்கும் உற்ற செய்திகளைப்பற்றி பல அறிவாளிகள் எழுதிய வியாசங்கள் இதில் வெளிவரும். ஒவ்வொரு மதாபிமானி, தேசாபிமானிகளிடத்திலும் தவறிருக்கவேண்டிய ஒரு சிறந்த பத்திரிகையாகும்.

வருஷ சந்தா ரூ 3.

மானேஜர், தெய்வபக்தன், கும்பகோணம்.

---

## "சந்திரா" பற்பொடி.

இந்த 'சந்திரா' பற்பொடியின் குணம் பல்வலி, பல் அசைதல், ஈர் கரைதல், பல்கூசுதல் முதலிய சகலதந்தரோகங்களையும் நிவர்த்திசெய்து பல்லைக் கெட்டிப்படுத்துவதில் நிகரற்றது. அநேக டாக்டர்களாலும் கனதனவான்களாலும் நற்சாக்ஷிப் பத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் குணம் ஒரு முறை வாங்கி அனுபவித்தால் தெரியும். ஒரு பலம் டப்பி 1க்கு விலை அணா 3. டஜன் 1க்கு விலை ரூ 2 வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும், மிகுந்த உயர்ந்த முறையில் சாஸ்திர முறைப்படி தயார் செய்யப்பட்டிருக்கிறது.

எல். ராமச்சந்திர ஐயர்,
நீலகண்ட கதர் ஸ்டோர்,
பெரியகடைத்தெரு, கும்பகோணம்.

---

## ஸ்ரீ பாலானந்த பற்பொடி.

இது பல்வலி, பல் ஆடுதல், இரத்தம் வடிதல், பல் கூச்சம், பல் சொத்தை இவைகள் சௌக்கியமாகும். தவிர நீர் கத்தல், நீர் எரிச்சல், வெட்டை, புண், வயறுகடுப்பு, இரத்தக் கடுப்பு, மூலக்கடுப்பு இவைகளுக்கு ஆட்டுப்பால் அல்லது எருமைத்தயிரில் மேற்படி பற்பொடியைக் கலந்து சாப்பிட்டால் ஒரே வேளையில் அனுகூலப்படுத்தும்.

மூன்று மாதம் உபயோகப் படுத்தக்கூடிய டப்பி 1-க்கு விலை அணா 4.

அஷ்டகுல்ம
ஸர்வரோக நிவாரண யௌவனலேகியம்

குல்மம் முதலான சகல ரோகங்களையும் கண்டித்து சரீரத்தை பெலப்படுத்தி ஆரோக்கியத்தையும் சுகத்தையும் கொடுக்கக்கூடியது. பத்தியமில்லை. இதன் விலை சேர் 1-க்கு ரூ. 4.

நேத்திரானந்த தைலம்.

கண் எரிச்சல், கண்புகைச்சல், கண்மறைவு மண்டைக்குத்தல், சொரிசிரங்கு இவைகள் சௌக்கியமாகும். கிரயம் சேர் 1-க்கு ரூ. 2.

குறிப்பு:—காசரோகம், குஷ்டம் முதலிய மகா வியாதிகள் நிவர்த்தியாகும் அருமையான மருந்துகள் கிடைக்கும். ஏழைகளுக்குத் தர்ம வைத்தியம். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

V. பாலு அண்டு வன்ஸ்,
எலந்துறை, திருவிடமருதூர் போஸ்டு.



## தத்துவ போதினி.

ஓர் சிறந்த மாதப்பத்திரிகை.

இப்பத்திரிகையில் ஸ்ரீமத் வால்மீகி இராமாயணமும், துப்பறியும் நாவல்களும், திருக்குறளுரையும், சிவபுரி க்ஷேத்திரத்தின் மகிமையும், தத்துவ விஷயங்களும் ஸ்திரீகள் சிறுவர்களைக் குறித்த புத்திமதிகள், கல்லுரைகள், வர்ணாச்ரம தர்மத்தைக்குறித்த முக்கியமான விஷயங்களும் தக்க பெரியோர்களால் எழுதப்படுகின்றது.

இந்தியா, பர்மா, சிலோனுக்குச் சந்தா ரு. 1—0—0.
(வெளி நாடுகளுக்கு ரு. 1—4—0).

தத்துவபோதினி ஆபீஸ்,
328, தங்கசாலைத்தெரு, சென்னை.

---

## தேசீய ராஜீய
## சரித்திர நூல்கள்.

ஸ்ரீமான் எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் எழுதியவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ரஜபுத்திர வீரர் சரித்திரம் | 1 | 4 | 0 |
| 2. | ஆரிய சரித்திரம் | 1 | 0 | 0 |
| 3. | மகாத்மா காந்தி சரிதம் | 0 | 8 | 0 |
| 4. | ஒத்துழையாமை சரித்திரம் | 0 | 4 | 0 |
| 5. | இந்தியாவும் சுய ஆட்சியும் | 1 | 8 | 0 |
| 6. | ஐசுவரிய சக்கரம் | 0 | 8 | 0 |
| 7. | திருக்குறள் நீதிக்கதைகள் | 0 | 6 | 0 |

இவையும் இன்னும் பல அரிய புத்தகங்களும் கீழ்க்கண்ட இடத்தில் கிடைக்கும்.

மயில் வாகன் கம்பெனி,
புத்தக வியாபாரிகள்,
ஐயப்பசெட்டித்தெரு, மண்ணடி, மதறாஸ்.

---

## கற்பகம்.

ஒரு செந்தமிழ் மாதச் சஞ்சிகை.

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம், இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

வருஷ சந்தா உள் நாட்டிற்கு ரூ 1—0—0.
" வெளி நாட்டிற்கு " 1—8—0.

மானேஜர்:— "கற்பகம்" புதுவை.

---

## லோகமான்ய திலகர்.

பிறந்ததுமுதல் இறந்தது வரை முழு விவரத்துடன் ஸ்ரீயுத கிருஷ்ணசுவாமி சர்மா எழுதியது. கீதாரகசியம், காந்தி-திலகர் சம்வாதம், திலகர் ராஜீயக் கொள்கை, விசாரணைகள், நித்திய வாழ்க்கை முதலிய பலவிஷயங்கள் 16 அத்தியாயங்களில் காணலாம்.

300 பக்கங்கள் கொண்டது விலை ரு 1—8—0.

## தேசாபிமானத்தையூட்டும் நூல்கள்,

ஸ்ரீயுத் கிருஷ்ணஸ்வாமி சர்மா இயற்றியவை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மகாத்மா காந்தியடிகள் | | | | | 1 | 8 | 0 |
| அலி சகோதரர்கள் | | | | | 1 | 0 | 0 |
| டால்ஸ்டாய் ருஷ்யஞானி | | | | | 0 | 4 | 0 |
| சிவாஜி மகாராஜா | | | | | 1 | 0 | 0 |
| இந்தியா இழந்த தனம் | | | | | 1 | 0 | 0 |
| இராஜரீக சாஸ்திரம் | | | | | 1 | 0 | 0 |
| இராஜராஜ சோழன் | | | | | 0 | 10 | 0 |
| அசோக சக்கரவர்த்தி | | | | | 0 | 8 | 0 |
| நெபோலியன் | 1 | 8 | 0 | டண்டிதநேரு | 0 | 2 | 0 |
| கும்பமகாராணு | 0 | 6 | 0 | ஆத்மசக்தி | 0 | 10 | 0 |

மானேஜர், கிராமானுகூலன், கும்பகோணம்.

---

தாதுபுஷ்டிக்குச் சிறந்த
ராஜவீரிய புஷ்ணி
## மகாவித்துவாதி லேகியம்.

30 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டப்பி ரூ. 3.

பிரதிதினம் காலை மாலை சாப்பிட்டுவர நல்ல பசியைக்கொடுத்து, மலத்தை சுகமாய்க்கழித்து, இரத்தவிர்த்திசெய்து, நரம்புகளுக்கு முறுக்கேற்றி, ராஜக்கருவிகள்பலப்பட்டுதேகதிடம், தேஜஸ், முகவசீகரம் மனோற்சாகம் முதலியவை ஏற்பட்டு சந்தானவிர்த்தியை யளிக்கும். சுருங்கச்சொல்லின் இழந்துபோன பலம் முழுவதும் திருப்பிக்கொடுக்கும். வேண்டுபவர் கியாட்லாக்கிற்கு எழுதவும்.

ஐ. ஷேக்ஹூரலி சாகிப்,
நேடிவ் யுனனி டாக்டர்,
ஆயுர்வேதிக் யுனனி மெடிகல் ஹால்,
டவுன் ஹைஸ்கூல் ரோடு, கும்பகோணம்.

# A. N. காதர் அவுலியா பரிமளச்சாலை,

வலங்கைமான். (தஞ்சை ஜில்லா.)

—:(x):—

A. N. காதர் அவுலியா

## வீரிய விருத்தி சிட்டுக்குருவி லேகியம்,

24 நாள் சாப்பிடக்கூடிய 8 பலம் (1-சேர்) எடையுள்ள டப்பி 1க்கு விலை ரூ 2—12—0.

அறிவிற் சிறந்த ஆரிய சிரோன்மணிகளாகிய எனது சகோதரர்களே! அவசியம் கவனிக்க வேண்டியது ஒன்று.

கனவான்களே! ஜீவனுக்கு இரத்தமே பிரதானம். முக்கியமாக மனிதர்கள் நோயின்றி வாழ்வதற்கு, ஆயுள் விருத்தி, பெலம், காந்தி, ஊக்கம், காமம், வீரிய விருத்தி, ஆண்மை, சந்தான விருத்தி முதலியவை அடைவதற்கு அவ்விரத்தத்தினின்று உண்டாகும் சுக்கிலமே பிரதானம் ஆகையால் இச்சுக்கிலத்தைப்பற்றிய வியாதிகளை அறிந்திருப்பது பிரதானத்திலும் மிகப் பிரதானமே. ஏனெனில் இப்பிராணுதாரமாகிய இந்திரியத்தை உற்பத்தி செய்யக்கூடியதில் முக்கியமானவை வீரியவிர்த்தி சிட்டுக்குருவி லேகியம் ஒன்றே. இதையுண்டு உற்பத்தி செய்துகொள்ளாமல் ஆண்மையை முழுவதும் இழந்தவர்களனந்தம். ஆண்மைகுறைவு பட்டிருப்பவர்களனந்தம். நாளுக்கு நாள் அதிக அளவாய் வீரியதத்துவம் நஷ்டமடைந்து வருபவர்களனந்தம். இன்னும் பலநோய்களடைந்து தளர்ந்து மெலிந்து துற்பலமடைந்து மனமுடைந்து சொல்லொணு வருத்தத்தோடு அகால மரணத்திற் குள்ளாகிறார்கள். இவ்வருமையான வீரியவிருத்தி சிட்டுக்குருவிலேகியத்தை யாதொரு பத்தியமன்னியில் உண்டுவர, கீழ்க்கண்ட வியாதிகளை ஆண்டவன் உதவியால் நிவர்த்தி செய்து, முன்னிருந்த பெலத்தைவிட பதின்மடங்கு பெலத்தையும், குறையாத ஆண்மை தத்துவ வீரியத்துடன் சுருசுருப்பையும், மனைவாழ்க்கையில் ஆயுள்பரியந்தம் அளவுகடந்த மாருத இன்ப சுகத்தையும் உண்டுசெய்துக்கொண்டே வரும். தஞ்சைமாநகரை ஆண்டு வந்த சிவாஜீ மகாராஜா அவர்கள் கையாண்டுவந்த அரண்மனை வாகட முறைப்படி செய்து விற்றுவருகிறோமென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல யாவருக்கும் தெரிந்த விஷயம். இவ்விரிய சிட்டுக்குருவி லேகியத்தில் ஆண் சிட்டுக்குருவியுடன் விலையுயர்ந்த அபூர்வ யுனனிசரக்கு 13, வித்து 33, பிசின்வகை 9, கடைச்சரக்கு 34, பால்வகை 7, பழ ரசவகை 7, மூலிகைச் சத்துவகை 9 புஷ்பவகை 10, அயகாந்தசெந்தூரம் 2, வெள்ளிரேக் 1 நற்கண்டு, தேன், நெய் 8, ஆக சரக்கு 128 உடன், செய்பாகம் கைபாகம் தவருமல் வாய்க்கு மதுரமாகச் செய்திருக்கிறபடியால் இதன் சிறந்த குணங்களைக்கீழே காணலாம்.

### தீரும் வியாதிகளின் விபரம்.

உஷ்ணம், வெட்டைச்சூடு, வெட்டை வாய்வு, வெட்டைப் பிடிப்பு, கைகால் அசதி, சுஸ்தி, தேகம் மெலிவு, பெலக்குறைவு, இடுப்புவலி தாதுநஷ்டம், இந்திரியம் நீற்றுப்போய் இருக்குதல், மனை வாழ்க்கையில் விருப்பமின்றி இருத்தல், மனைவியாருடன் சரச சல்லாப வார்த்தையாடுகையில நாதம் தனக்குத் தெரியாமல் ஸ்கலிதமாகுதல் மனைவாழ்க்கையில் சொற்பநேரத்தில் ஸ்கலிதமாகுதல், நோக்குமளவில் ஸ்கலிதமாகுதல், நித்திரையில் ஸ்கலிதமாகுதல், மனை வாழ்க்கைக் காலத்தில் ஆண்குறி பருத்து சொற்ப நேரத்துக்கெல்லாம் குறி தளர்ந்து இந்திரியம் வெளிப்படுதல், மனைவாழ்க்கையில் எண்ணமே இல்லை மலும், உத்தியில் காங்கை மீறி சம்போகக் குறைவு ஏற்பட்டு ஆண்குறி தளர்ந்து வலுவில்லாமற் சோர்வடைந்திருக்குதல், இந்திரிய இழிவு, ஆண்மலடு, மந்தம், கிழத்தனம், கோழைத்தனம் சொற்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், ஆண்குறி மெலிவு, துவளல், ஆண்குறி சோர்வடைந்திருக்குதல், மனைவாழ்க்கையில் இருவரும் இன்பசுகமில்லாமல் சீக்கிரம் ஸ்கலிதமாகுதல், சொற்ப வாலிபகாலத்தில் முற்றிலும் மனைவாழ்க்கை எண்ணமே இல்லாமல் மட்டுத்தன முடையவர்களும், வாலிப மூர்க்க காலத்தில் மிதமிஞ்சி பல விலைமாதர்களிடத்தில் செலவுசெய்து தனது காயகி மனைவாழ்க்கையில் பெலனற்று இருக்குதல், அகால மூப்பினுல் சம்போககுறைவு ஏற்பட்டவர்களும், மிதமிஞ்சிய சம்போகத்தால் நீர்த்தாரை பெருத்து மனைவாழ்க்கையில் இன்பமற்றிருக்குதல், கவலை, ஊக்கம். அதிகப் பிரயாசை, சித்திரை பங்கம், இவைகளால் இரத்தம் கெட்டு உடல் வெளுத்துப் பெலஹீனமுடையவர்களும் அன்னதோஷம். பசிமந்தம் ஜீரணக்குறைவு, புளித்த ஏப்பம், வயர் உப்பிசம் இவை யாவையும் நீக்கி, இரத்த விருத்தியுடன் நாம்புகளில் முறுக்கேறி வீரிய விர்த்தியை உண்டு செய்து கொண்டே இந்திரியத்தை பனை நொங்கைப்போல் இருக்கினதை இளக்கியும், குறுகினதை நீளவும்செய்து பருத்து நீண்டு ஆண்மை தத்துவத்தையும், ஆயுள் பரியந்தம் மாருத பூரண சக்தியையும், மனை வாழ்க்கையில் மனைவியின் ஆசையைப் பரிபூரணமாய் நிறைவேறும்படி செய்து கொண்டு வருவதுடன், நோயின்றி தேக புஷ்டி, முகவசீகரம், ஆரோக்கியம் முதலானவைகளை உண்டு செய்துக்கொண்டு வருவதுடன் ஆண்டவன் உதவியால் சந்தான புத்திர பாக்கியத்தை எளிதில் பெறவும் செய்யும். இந்த லேகியத்தை உபயோகப்படுத்திய உத்தமர்கள் இந்தச் சிறந்த குணங்களைச் சுதானந்த ஆனந்தத்துடன் புகழ்வார்களென்பது உண்மையான நிச்சயம். லேகியத்தை ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

லேகியத்தைக் காலையில் ஒரு சுண்டைக்காய் அளவும் மாலையில் இரண்டு சுண்டைக்காய் அளவும் சாப்பிடவேண்டும். (பத்தியம் யாதொன்றுமில்லை.)

223464



# சிந்தாமணி திரவிய சாலை,

பேட்டைத்தெரு, கும்பகோணம்.

## ஸிரேஷ்டமான

### சிந்தாமணி ஔஷதங்களின் விலை விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | சிந்தாமணி ஜுர நிவாரணி (எல்லாவகை ஜுரங்களுக்கும்) பாட்டில் 1-க்கு ரூ | 0—12—0 |
| 2 | ஷை சந்திர கலாப செந்தூரம் (வயற்றுப் போக்குகள் சீதபேதிக்கு) | 1—0—0 |
| 3 | ஷை வாயுவேதனபேதினி (தீராத இடுப்புவலிகள் வாயுவலிகளுக்கு) சீசா 1-க்கு | 0—6—0 |
| 4 | ஷை ஜீவாமிர்த மாத்திரை (எல்லாவியாதிகள்பலம் தாதுவிர்த்திக்கு) மா 24-க்கு | 1—0—0 |
| 5 | ஷை காலாா சஞ்சீவி (விஷபேதியை ஒரே வேளையில் நீக்கி காப்பாற்றுவது) | 0—12—0 |
| 6 | ஷை ரஸம் (எல்லாவலிகள் சுளுக்கு மூர்ச்சை முதலியவற்றை உடனே கண்டிப்பது) | 2—0—0 |
| 7 | ஷை வாதகெஜபாத கேஸரி 3 முறைக்கு | 3—0—0 |
| 8 | ஷை போஜன கேசரி (அக்கினி மந்தம் பித்தம் வாய்வு வகையறுவுக்கு) | 0—12—0 |
| 9 | ஷை சுவர்ணமாலிகா மாத்திரை 40-க்கு | 3—0—0 |
| 10 | ஷை சுவர்ண செந்தூரம் 14 வேளை | 7—0—0 |
| 11 | ஷை சித்தமகரத்வஜம் 14 வேளை | 3—0—0 |
| 12 | ஷை கோரோஜனை மாத்திரை 90-க்கு | 0—12—0 |
| 13 | ஷை குழந்தை வயற்றுக்கட்டி நிவாரணி | 1—8—0 |
| 14 | ஷை சூதகவேதன பேதினி | 2—0—0 |
| 15 | ஷை பெரும்பாடு ரோக நிவாரணி | 2—0—0 |
| 16 | ஷை சஞ்சீவி மாத்திரை (சுகபேதிக்கும் ஜுரங்கள் பல வியாதிகளுக்கும்,மா 75 | 0—12—0 |
| 17 | ஷை சோகைபாண்டு நிவாரணி | 2—8—0 |
| 18 | ஷை க்ஷயகாச நிவாரணி 20 வேளை | 5—0—0 |
| 19 | ஷை குன்ம ஹாகுடாரி தவாாத குணம் | 3—8—0 |
| 20 | ஷை குடல்வாத நிவாரணி | 5—0—0 |
| 21 | ஷை அப்ரக செந்தூரம் (நீரழிவு வெட்டை மதுமேகம் தாது கட்டுக்கும், | 5—0—0 |
| 22 | ஷை வீதாம்ல செந்தூரம் நீரடைப்பு நீர் எறிவு வகைகளுக்கு 16 வேளைக்கு | 1—0—0 |
| 23 | ஷை வெள்ளைவெட்டை நிவாரணி | 2—4—0 |
| 24 | ஷை மூலரோக நிவாரணி | 3—0—0 |
| 25 | ஷை யானைக்கால் நிவாரணி 14 வேளை | 3—8—0 |
| 26 | ஷை மேகரோகாந்தகன் | 3—0—0 |
| 27 | ஷை மேகரண நிவாரணதைலம் | 0—8—0 |
| 28 | ஷை நேத்திராஞ்சனம் பாட்டில் 1-க்கு | 0—8—0 |
| 29 | ஷை வில்வாதி லேகியம் 1சேர் டப்பி | 2—8—0 |
| 30 | ஷை பலாலாக்ஷாதிதைலம் 1சேர்டப்பி | 2—0—0 |
| 31 | ஷை இருமலுக்கு பவளபஸ்பம் | 2—8—0 |
| 32 | ஷை விஜயபைரவ தைலம் (வீக்கங்கள் வாய்வுகள் வலிகள்ஜன்னிபார்ஸவாதம், | 1—0—0 |
| 33 | ஷை காருண்யாமிருதம் வலிப்புகள் சித்தப்பிரமை மூர்ச்சைகளுக்கு | 3—0—0 |
| 34 | ஷை ஸ்ரீ சற்குருாகை 1-க்கு | 2—8—0 |
| 35 | ஷை சந்தான கல்பம் | |

அரை அணு லேபிள் அனுப்பினுல் முழுவிபரமடங்கிய காட்லாக் இனமாக அனுப்பப்படும்.

புரோப்ரைட்டர்

ஆ. சி. கிருஷ்ணசாமி செட்டியார்

மணத்தின் ஊற்று! வாசனையின் வித்து!!

# பரிமளப் பொக்கிஷம்.

எது?

கும்பகோணம்

பெரியகடைவீதி,

TRADE MARK PAT. RGT.

## K. அப்துல்ரஹிமான் சாஹிப் & சன்ஸ்,

## பரிமளச்சாலை.

எமது பரிமளச்சாலையில் பரிமள வாசனைத்திரவியங்கள் எமது முன்னோர்களின் முறைப்படி அனுபவம்வாய்ந்த எங்களால் தயார்செய்து வழங்கப்பட்டுவருவது யாவரும் அறிந்ததே! எமது பரம்பரை வியாபாரப்பெருமையும், சாமான்களின் உயர்ந்த மணமும் அரசர்கள், ஜமீன்தாரர்கள், பிரபுக்கள், உயர்தர உத்தியோகஸ்தர்கள், மற்றைய நல்லோர்கள் பலராலும் கௌரவிக்கத்தக்கது என்பது ஒருமுறை வாங்கி அனுபவித்தவர்களுக்கு நன்கு விளங்கும். எம்மிடமுள்ள சகல பரிமளச்சாமான்களும் முனிசிரேஷ்டரான ஷேக்பரீத் சக்கரகஞ்ச் அவலியா அவர்களால் தயாரிக்கப்பட்டு அனுபவசித்தி பெற்றன. எமது முன்னோர்கள் டில்லி அக்பர்சக்கிரவர்த்தியாருக்கும், தஞ்சை மன்னர்பிரானுக்கும் பரிமளப்பொருளை வழங்கினார்களென்பதையும், அம்முறைப்படியே நாம் இப்பொழுதும் தயாரித்துவருகிறோம் என்பதையும் தற்சமயம் தென்னாட்டிலுள்ள அரசர் குடும்பத்திலும், பிரபுக்களகத்திலும் நடக்கும் திருமணம்போன்ற மற்றுமுள்ள சுபகாரியங்களினிடையிலும், சந்தோஷ உல்லாச வைபவங்களினிடையிலும் எமது பரிமளத்திரவியங்களே நறுமணங் கமழவேண்டுமென்று விரும்பியே தொன்றுதொட்டு நாங்கள் கொண்டுள்ளமுறை ஒருசிறிதும் வழுவாதுசெய்து, அதிகலாபம் கருதாது யாவரும் புசமலர்ச்சியுடன் ஏற்கத்தக்கதாகவுள்ளன. (கேட்லாக் இனாம்.

1 சந்தனாதித்தைலம்
2 அரைக்கீரை விதைத்தைலம்
3 மணமிகுவீசும் பத்திகள்
4 புனுகு ஜவ்வாதுகள்
5 பஞ்சவர்ண பக்குவ கொப்பரைச்சீவல்
6 சற்குண ஸ்நானப்பொடி
7 சந்தன வில்லைகள்
8 சித்தர்விரும்பும் அத்தர் தினுசுகள்
9 வாசவர்மெச்சும் கேசர் பவுடர்
10 பரிமள பாக்குத்தூள்
11 மிகக்குண பரிமள வில்லைகள்
12 மணமிகு அரகஜா
13 சுகந்த சந்தனப்பவுடர்
14 பக்குவமான பரிமளச்சுண்ணாம்பு
15 நற்குண பற்பொடி
16 ஈசனுக்குரிய தசாங்கம்
17 ரோஜாப்பூ குல்கந்து
18 சரிமண நறுமண கலவைச்சந்தனம்

N.B.—நாம் நமது சகோதரர்களுடன் K. தாவுத்சாஹிப் & பிரதர்ஸ் என்ற பரிமளச்சாலையின் வியாபாரப்பெருமையை இதுகாறும் மேலோங்க ஒத்துழைத்து வந்தோம். தற்சமயம் சகோதரர்கள் ஆணைப்படி நாம் பாகம் பிரித்துக்கொண்டு தனித்தொழில் நடத்துகிறோமாதலின், நம்மீது அன்புபூண்டுள்ள ஸ்ரீமான்கள் நமது பரிமளச்சாலையை ஆதரிக்குமாறு விரும்புகின்றோம். தங்களுடையவும், தங்கள் நண்பர்களுடையவும் அன்பார்ந்த ஆர்டரை எதிர்பார்க்கிறோம்.

Printed at the Sri Krishna Vilasa Press and Published by N. Apathsagaya Aiyer, Kumbakonam.